
# யோகி வேமனாவின்
## தேர்வு செய்த
# கவிதைகள்

தமிழ்வடிவம்
சேலம் பா. அன்பரசு



**விஜயம் பதிப்பகம்**
**சேலம் – 636 002.**

# யோகி வேமனாவின்
## தேர்வு செய்த
# கவிதைகள்

தமிழ் வடிவம்

**சேலம் பா. அன்பரசு**

*This book is published with the
Financial Assistance of
Tirumala Tirupati Devasthanams
under their scheme
Aid to Publish Religious Books.*

உரிமை : சேலம் பா. அன்பரசு

ISBN : 81-900144-6-3

முதல் பதிப்பு : 2008

# யோகி வேமனாவின் தேர்வு செய்த கவிதைகள்

# Selected Poems of Yogi Vemana

(With Criticism)

Author :
SALEM B. ANBARASU
30, Chenna Krishnan Street,
SALEM - 636 002. Tamil Nadu.

The author of the book is alone liable for any legal action at his own risk and responsibility in case of disputes or criticism, if any arises after the publication of the book.

Copies can be had from :
VIJAYAM PATHIPPAGAM
30, Chenna Krishnan Street,
SALEM - 636 002. Tamil Nadu.
Ph : 95 - 0427 - 2214280


Price : Rs. **60-00**

Size : 1/8 Demy

Pages : 96

Copies : 1000

Designing & Printing :
SRI JOTHI COMPUTERS
236/201, Omalur Main Road, Swarnapuri,
SALEM - 636 004. Tamil Nadu.
Ph : 95 - 0427 - 4264273



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 5 |
| 2. | யோகி வேமனா பற்றி .... | 6 |
| 3. | வேமனா காட்டும் வாழ்க்கை நெறி | 11 |
| 4. | வேமனாவின் தேர்வு செய்த கவிதைகள் | 24 |
| 5. | திருவள்ளுவரும் வேமனாவும் (சிறப்புக் கட்டுரை - கள்ளக்குறிச்சி 'குறள்மணம்' இதழில் 1987-88 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட தொடர் கட்டுரை) | 68 |
| 6. | பார்வைக்கு உரியவை | 96 |

# முன்னுரை

இந்நூலில் வேமனாவின் 210 பாடல்கள் தமிழ் வடிவம் செய்து வெளியிடப்படுகின்றன. இப்பாடல்கள் தெலுங்கு மொழியில் 'வேமனா பத்தியமுலு' என்று அழைக்கப்படுகின்றன. வேமனா பாடல்களைப் போல, பிறர் எழுதிச் சேர்த்த பாடல்கள் இன்று மூவாயிரமாக வளர்ந்துள்ளன. நிருவாணக் கோலத்தில் அவர் அமர்ந்திருப்பது போன்ற மேலட்டையுடன் பல பதிப்புகள் தெலுங்கில் வெளி வந்துவிட்டன. வேமனா பாடல்களின் கடைசி அடி 'விணர வேமா' என்னும் முத்திரையுடன் முடிகிறது. 'கேளாய் வேமா' என்பதே இதன் பொருளாகும். வேமனா இவ்வாறு தமது பாடலின் இறுதி அடியை அமைத்ததற்கான காரணம் 'வேமனாவைப் பற்றி...' என்னும் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடலும் நான்கு அடிகள் வருமாறு அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலின் முதலில் தெலுங்குப் பாடலின் முதல் அடி தமிழ் வரி வடிவத்தில் தரப்பட்டுள்ளது. இது தெலுங்கு மொழி தெரிந்தவர்களும், தமிழும் தெலுங்கும் தெரிந்தவர்களும் சரி பார்த்துக் கொள்வதற்காகத்தான். தெலுங்குப் பாடலின் வரி தமிழ்ப் பாடல் வரிகளைப் போல் இல்லாமல் வித்தியாசமான எழுத்து வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

பாடல்களில் இடம் பெற்றுள்ள வடமொழிச் சொற்களுக்கு உரிய விளக்கம் அதே பக்கங்களில் அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ளது.

யோகி வேமனாவின் கருத்துகளை தமிழ் மக்கள் அறியும் வண்ணம் ஒரு நூலாக வெளிவர பொருள் உதவி செய்த திருமலை திருப்பதி தேவஸ்தானப் பொறுப்பாளர்களுக்கு உளமார்ந்த நன்றி.

அன்புடன்,

சேலம் - 636 002. **சேலம் பா. அன்பரசு**

# யோகி வேமனாவைப் பற்றி ...

யோகி வேமனா என்பவர் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவரது தந்தையார் குமரகிரி வேமா ரெட்டி. தாயார் மல்லம்மாள். வேமனா சிவ பெருமானை வழிபடும் சைவ சமயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

யோகி வேமனாவின் இயற்பெயர் வேமா ரெட்டி. இவர் தமது இளம் வயதில் ஆடம்பரப் பிரியராகவும் பரத்தையர் தொடர்பு மிக்கவராகவும் இருந்தார் என்னும் செய்தியும் உண்டு.

வேமனாவின் பெற்றோர் இவரது இளம் வயதிலேயே இறந்து விட்டார்கள். ஆகவே இவர் தமது அண்ணன் வெங்கா ரெட்டி, அண்ணி சரசாம்பாள் ஆகியோரின் பாதுகாப்பில் வளர வேண்டிய நிலை ஏற்பட்டது. வெங்கா ரெட்டி-சரசாம்பாள் ஆகியோருக்குக் குழந்தைகள் எவரும் இல்லாததால் இவர்கள் வேமனாவை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார்கள்.

வேமனாவின் இளம் பருவக் கேளிக்கைகளுக்குப் பணம் தேவைப்பட்டது. வேமனாவின் மனம் கவர்ந்த ஒரு பெண் தனது ஆவலை அவரிடம் கூறினாள். அவளது ஆவல் இதுதான். ‘வேமனாவின் அண்ணி

சரசாம்பாள் அணிந்திருந்த மூக்குத்தி தனக்கு வேண்டும் என்பது.' அந்த மூக்குத்தியை அவரது அண்ணியிடமிருந்து பெற்று வந்தால்தான் தன்னிடம் தொடர்பு கொள்ள முடியும் என்றும் இல்லாவிட்டால் அவளது வீட்டிற்கு வரக் கூடாது என்றும் கூறினாள் அவள்.

பரத்தையின் பேராசையைக் கேட்ட வேமனா மன அதிர்ச்சியும் மனக்கலக்கமும் அடைந்தார். அவரது கவலையைக் கண்ட அண்ணி சரசாம்பாள் அதற்கான காரணத்தையும் வேமனாவிடமிருந்து கேட்டறிந்தாள். வேமனாவின் விருப்பப்படி தனது மூக்குத்தியைக் கழற்றி வேமனாவிடம் தந்து அவரிடமிருந்து ஒரு உறுதிமொழி யைப் பெற்றுக் கொண்டார்.

"தம்பீ ! நீ இந்த மூக்குத்தியை அந்தப் பரத்தையிடம் தரும்போது, அவள் உடம்பில் ஆடை எதுவும் இல்லாமல் இருக்க வேண்டும். இரு கால்களையும் அகலப் பரப்பிக் கொண்டு நிற்க வேண்டும். அப்படி அவள் நிற்கும் போது அவளுக்குப் பின்பக்கம் நீ நின்று அவளது கால்களுக்கு இடையே மூக்குத்தியைத் தர வேண்டும். அந்தப் பெண் குனிந்து அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதுவே நீ எனக்குத் தர வேண்டிய உறுதிமொழி" என்றாள் அண்ணி.

வேமனா அண்ணி சொன்னது போலவே செய்ய, அப்போது பரத்தையின் பின்பக்கம் கண்ட காட்சி பெண்களையே வெறுக்கும் அளவுக்குச் செய்துவிட்டது. அன்று முதல் வேமனா பித்துப் பிடித்தவர் போலத் திரியலானார்.

மைத்துனராகிய வேமனாவைத் திருத்த ஒரு வழியைக் கூறினால் அவர் இப்படி ஆகிவிட்டாரே என்று வருந்திய அண்ணி சரசாம்பாள் வேறு வேலையை வேமனாவிடம் ஒப்படைத்துத் திசை திருப்ப முயன்றாள்.

தங்கள் குடும்பத்திற்குச் சில பொன் நகைகளைச் செய்யப் பொற்கொல்லர்கள் சிலரை நியமித்து அவர்களை மேற்பார்வை இடும் பொறுப்பை வேமனாவிடம் ஒப்படைத்தாள் சரசாம்பாள். அக்குழுவின் தலைமைப் பொற்கொல்லர் தினமும் நேரம் கழித்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந் தார். அதற்கு அவர் கூறிய காரணம் வேமனாவிற்குத் திருப்தி அளிக்கவில்லை.

ஆகவே, தலைமைப் பொற்கொல்லர் அன்றாடம் தாமதமாக வரும் காரணத்தைக் கண்டறிய அவருக்குத் தெரியாமல் அவரைப் பின் தொடர்ந்து சென்று வந்தார் வேமனா.

மலைக் குகை ஒன்றில் ஆழ்ந்த தியானத்தில் இருந்த யோகி ஒருவரை வழிபாடு செய்வதற்காக தலைமைப் பொற்கொல்லர் விடியற்காலையிலே எழுந்து குளித்து விட்டுப் பூ, பழம் முதலிய பூசைக்குரிய பொருட்களை எடுத்துக் கொண்டு செல்வதைக் கண்டார் வேமனா.

ஒரு நாள் தியானத்தில் இருந்து கண் திறந்த யோகி, தன்னை வழிபாடு செய்ய வந்திருந்த தலைமைப் பொற்கொல்லரிடம், "நாளை சூரியன் உதித்த மூன்று நாழிகைக்குள் இங்கு வந்துவிடு. அப்போது நல்ல நேரம். நான் உனக்கு உபதேசம் செய்கிறேன்" என்று கூறினார்.

யோகியார் தலைமைக் கொல்லரிடம் கூறியதை மறைந்திருந்திருந்து கேட்டுவிட்ட வேமனா, அடுத்த நாள் தலைமைப் பொற்கொல்லர் யோகியாரிடம் அங்கு வந்து உபதேசம் பெறுவதற்குப் பதிலாகத் தாமே வந்து உபதேசம் பெற்றுவிடுவது என்று திட்டமிட்டு, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தார்.

யோகியாரிடம் அவர் குறிப்பிட்ட நேரத்திற்கு தலைமைப் பொற்கொல்லர் சென்று உபதேசம் பெற முடியாதபடி, அவர் அந்த நேரத்தில் நகை செய்யுமிடத்தில் இருக்க வேண்டியுள்ளது என்று அண்ணியாரிடம் சொல்லி இருக்கச் செய்தார் வேமனா.

வேமனா திட்டமிட்டபடியே எல்லாம் நடந்தது. தலைமைப் பொற்கொல்லருக்குப் பதிலாக அவர் குகையில் தியானத்திலிருக்கும் யோகியின் முன்பு போய் நின்றார். யோகியாரும் கண் திறந்தார். ஆனால் வந்திருப்பது வேறு நபர் என்பதை அறிந்த யோகியார், தலைமைப் பொற்கொல்லரைப் பற்றி விசாரித்தார். பொற்கொல்லர் தான் அவருக்குப் பதிலாக தன்னை அனுப்பியதாகப் பொய் கூறினார்.

வேமனா கூறியதைக் கேட்ட யோகியார், "சரி, நல்ல முகூர்த்த நேரம் இது. இந்த நேரத்தில் வந்துள்ள உனக்கு உபதேசம் செய்து விடுகிறேன்" என்று உபதேச மந்திரத்தை வேமனாவுக்குக் கூறிவிட்டு தியானத்தில் ஆழ்ந்து விட்டார்.

யோகியாரிடம் ஞான உபதேசம் பெற்ற வேமனா நேராக தலைமைப் பொற்கொல்லரிடம் வந்துதான் செய்து விட்ட தவறுக்காக அவரிடம் மன்னிப்பு வேண்டினார். தலைமைப் பொற்கொல்லரும் வேமனா

செய்த தவறைப் பெரிதுபடுத்தாமல் யோகியிடம் உபதேசம் பெற தனக்குக் கொடுத்து வைக்கவில்லை என்றும் வேமனாவே அதற்கு உரியவர் என்றும் கூறினார்.

மனம் நிறைவடையாத வேமனா, தான் பெற்ற உபதேசம் முறை தவறிப் பெற்றது என்றும், நான் உலக நீதிகளை வைத்துப் பாடப் போகும் பாடல்களின் இறுதி அடியில் தலைமைப் பொற்கொல்லரின் 'அபிராம' என்றும் பெயரை வைத்துப் பாடப் போவதாகவும் அவரிடம் கூறி ஆறுதல் அடைந்தார்.

அவர் கூறியது போலவே, வேமனா இயற்றிய பாடல்கள் (பத்யங்கள்) ஒவ்வொன்றின் இறுதி அடியிலும் 'விசுவதா பிராம விணர வேமா' என்று வருவது போல அமைத்தார்.

❀ ❀ ❀

# யோகி வேமனா காட்டும் வாழ்க்கை நெறி

'கூடனில்லாதவன் பலசாலியாவான். பாடும் பயிற்சியால் இராகம் இனிமையாகும். தின்னத் தின்ன வேப்பங்காயும் இனிமையாகும். எல்லாவற்றையும் பயிற்சியால் சாதிக்கலாம். ஒரு பானை கழுதைப் பாலைக் காட்டிலும் ஒரு கரண்டி பசுவின் பால் மேலானது.'

'மரத்திற்குள் நெருப்பு இருக்கலாம்; நெருப்புக்குள் மரம் இருக்க முடியாது. பிறப்பு - இறப்பு ஆகிய இரண்டில் சுதந்தரமில்லாத மனிதன் இடைக்காலத்தில் மட்டும் தனது விருப்பப்படிச் செயல்படத் துடிக்கிறான். இது சிரிப்புக்குரியது.'

- இவை யோகி வேமனாவின் தத்துவ முத்துக்கள்.

மற்ற இலக்கியவாதிகளைப் போல வேமனா நீண்ட காப்பியங்களையோ, பிரபந்தங்களையோ படைக்கவில்லை. இலக்கண அறிவு, யாப்பமைதி, கவித்துவம் அவரிடம் எள்ளளவும் இல்லை. இருப்பினும்

எளிய நடையில் உயர்ந்த பாடல்களைப் பாடியுள்ளார் வேமனா. பாமர மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் சொற்களையே அவர் பயன்படுத்தியுள்ளார். "Poetry is the Criticism" என்னும் மேத்யூ ஆர்னால்டு கருத்துக்கு ஏற்ப வேமனாவின் பாடல்கள் அமைந்துள்ளன.

வாழ்க்கையில் மனிதனை வழிமறிக்கும் சிக்கல்கள் பல. அவற்றைத் தமது நியாயாவாத அணுகுமுறையில் தீர்க்க வழி வகுத்துள்ளார். இவரது கருத்துக்கள் எந்த நாட்டவர்க்கும் எக்காலத்துக்கும் பொருத்தமானவை.

மனிதன் மகிழ்ச்சியுடன் வாழ வழி என்ன ? மனிதப் பரிணாம வளர்ச்சியின் தொடக்கத்திலேயே இக்கேள்வி பிறந்துவிட்டது. இன்றைய அறிவியல் யுகத்தில் மனிதன் இயற்கையை வென்று சாதனை படைத்துள்ளான்.

இடமும், காலமும் வசதி படைத்த ஒருவருக்குப் பெரிய செயல் அல்ல. இருந்த போதிலும் மனிதன் மகிழ்ச்சியாக இல்லை. ஏன் ? மனிதனின் சுய நல உணர்வும், சூது மதியும், அலட்சியப் போக்குமே காரணம்.

வேமனா மனித மனங்களை - அவற்றின் ஆழத்தை, அளக்கத் தெரிந்த ஒரு சிந்தனையாளர். உளவியல் அறிஞர்; அறிவின் ஆற்றலையும், உடலின் ஆற்றலையும் காரண காரியத்துடன் வெளிப்படுத்தி, நல்லது இது - கெட்டது இது என்பதை அறிந்து, தமது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டியது மானிடப் பிறவியின் நோக்கமாகும். இதை மனிதன் ஒரு நாளும் மறத்தல் கூடாது. இதுவே வேமனாவின் சிந்தனைகளின் சாரமாகும்.

விதியை வென்றவர் யார் ? 'முயற்சியால் எமனையும் வென்று விடலாம்' என்று கூறிய வள்ளுவப் பெருந்தகை ஊழ்வினையையும் சிறப்பித்துக் கூறியுள்ளார். தம்மை சிந்தனையாளர்கள் என்று கூறிக் கொள்ளும் சிலர் இப்படிக் கூறுகிறார்கள் : 'மனிதன் படும் துன்பங்களுக்குக் காரணம் அவனது முந்தைய கருமங்களே. பரம்பொருளின் விருப்பப்படியே அனைத்தும் நடக்கின்றன. மனிதன், ஒரு சிக்கலில் இருந்து விடுபடும் முன்பே வேறொரு சிக்கலில் மாட்டிக் கொள்கிறான். ஆகவே, மனிதனின் சிக்கல்கள் சங்கிலித் தொடர் போன்றவை' - இவ்வாறு கூறுகிறார்கள். ஆனால் தனது கண்ணெதிரில் ஏழைகள் படும் துன்பத்தைக் கண்டு, தம்மால் உதவ முடிந்தும் கண்களை மூடிக் கொள்கிறார்களே, ஏன் ?

தர்ம சாத்திரங்களில் பேசப்படும் சட்டங்களும், விதிகளும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. ஒரு நாட்டில் நீதி என்று ஏற்றுக் கொள்ளப்படும் செயல் வேறு நாட்டில் அநீதி என்று கருதப்படுகிறது. தருமமும், நீதியும் புத்தகங்களில் புதைந்து கிடப்பவை அல்ல. அவை மனித இதயங்களில் இருந்து பீறிட்டு எழுபவை. அவை இடம், காலம், சூழ்நிலைகளைப் பொருத்தவை.

நமது நாட்டிலோ தர்ம சாத்திரங்களுக்குப் பஞ்சமில்லை. அவற்றில் காணப்படும் சொல் ஜாலங்கள் வேறாக இருக்கலாம். ஆனால், பொருள் ஒன்றே தான். 'உண்மையே பேசு. நல்லதே செய். அன்னையும், தந்தையும் வணக்கத்திற்கு உரியவர். மனிதனின் நல்ல நடத்தையே சிறப்பானதாகும். பிறருக்கு நன்மையே செய்' இவற்றைத்தான் வேமனா

சிந்தித்தார். சிந்தனை ஒன்றாக இருந்தாலும் அணுகுமுறைகள் வேறுபட்டவையாகும். அவரது போதனைகள், 'ஏன் ? எதற்காக ?' என்னும் நியாயாவாத அடிப்படையில் பிறந்தவை. நடைமுறைக்கு ஏற்றவை.

யோகி வேமனா வாழ்ந்த காலம் முடிமன்னர் வாழ்ந்த காலம். ஏழை-பணக்காரர் ஏற்றத்தாழ்வு அன்றும் இருந்தது. பணக்காரர்கள் செய்யும் தர்மங்கள் அனைத்தும் மேட்டுக் குடியினருக்கே. அந்த தர்மங்களும் வெளி வேடமே. தானம் கொடுப்பவர் களும், அவற்றைப் பெறுபவர்களும் வேடதாரிகளே.

"பசியால் வாடும் மக்கள் பராமரிக்கப்பட வேண்டும். அவர்கள் நல்லவர் - தீயவர்; சாதியில் உயர்ந்தவர் - தாழ்ந் தவர் யாராக இருந்தாலும் சரியே". இதுதான் வேமனா பொருள் படைத்தவர்களுக்கு விடும் அறைகூவல்.

"பசியால் வாடும் ஏழைகளுக்குத் தாராளமாக வாரி வாரி வழங்குங்கள். அனைத்து உயர்களையும் நேசியுங்கள். உயிர்தான் கடவுள், மனிதன் வாழப் பிறந்தவன். வாழும் காலத்தில் அவன் அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ வேண்டாமா ?

வேமனாவின் காலத்தில் வாழ்ந்த செல்வந்தர்கள் இவ்வாறு நினைத்தார்கள். "ஏழைகள், தங்கள் முற்பிறவியில் செய்த கரும வினையின் காரணமாக, அதற்குரிய பாவத்தை இந்தப் பிறவியில் அனுபவிக்

கிறார்கள். இது அவர்களுக்குரிய தண்டனை. இது அவர்களின் நம்பிக்கை. ஆகவே எவ்வளவுதான் செல்வம் பெற்றிருந்தாலும் அதை ஏழைகளுக்குக் கொடுக்க மறுக்கிறார்கள்."

**"தான தர்மமுலனு தக ரேபு நேடனி**
**கால லயமு சேத கஷ்டநருடு**
**தானு ஏமவ்னோ தன ப்ரதுகு ஏமவ்னோ**
**மாய தெனியலேரு மஹினி வேமா"** - என்கிறார் வேமனா.

"தான தர்மங்கள் செய்வதை நாளை என்று தள்ளிப் போடுகிறார்களே, அவர்கள் இரக்கத்திற்கு உரியவர்கள். தங்கள் வாழ்நாள் முடிந்து போனால் சேர்த்து வைத்த செல்வம் என்ன ஆகும் ? இந்த மாயையை அறிய மாட்டேன் என்கிறானே மனிதன்" என்கிறார் வேமனா.

வீர சைவ சமயம் தழைத்திருந்த காலத்தில் யோகி வேமனா வாழ்ந்ததாகச் சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். உலக இன்பங்களை வெறுத்துச் சில யோகிகளுடன் வேமனா தொடர்பு கொண்டிருந்ததாகவும் சிலர் நம்பு கிறார்கள்.

இரசவாத வித்தை தெரிந்தவர் அவர் என்பார்கள் சிலர். ஹடயோகம் கைவரப் பெற்றவர் என்பதும் சிலரது கருத்தாகும்.

வேமனா எந்த வழியைப் பின்பற்றி இருந்தாலும், கடவுள் ஒருவரே என்னும் தமது ஆழ்ந்த நம்பிக்கையை,

**"பசுல ரூப வேறு; பாலு ஒக்க வர்ணமென**
**புஷ்ப ஜாதி வேறு; பூஜ ஒக்கடே**
**தர்சனம்புல வேறு; தெய்வம்பு ஒக்கடே**
**விஸ்வதா பிராம வினுர வேமா"** என்று கூறுகிறார்.

பசுக்களின் நிறம் வெவ்வேறு. பாலின் நிறம் ஒன்று தான். பூக்களின் நிறங்கள் பல. பூஜை ஒன்றுதான். வழிபாடு செய்யும் முறைகள் பல. ஆனால் இறைவன் ஒருவன்தான் என்கிறார் வேமனா.

வேமனா மக்கள் கவிஞராகக் கருதப்படுகிறார். அவர் சமுதாய மாற்றத்தை விரும்புபவர் என்பதை அவருடைய பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன. சமுதாயத்தில் நிலவிய மூட நம்பிக்கைகளை அவர் அறவே வெறுத்தார்.

'எல்லா உயிரினங்களும் சமம்' என்கிறது திருக்குறள். மனித இனத்தைப் படைத்தவன் பரம்பொருள். அப்படி இருக்கும்போது ஓர் இனத்தாரை உயர்ந்தவர் என்றும், மற்றொரு இனத்தாரைத் தாழ்ந்தவர் என்றும் வேறுபடுத்துவது எப்படிப் பொருந்தும் ? சாதி சமய வேறுபாடுகளை விட்டொழித்துவிட்டு, மனிதர் அனைவரும் 'ஓர் இனம்' என்னும் நிலையை அடைதல் வேண்டும்.

அஞ்ஞானம் - அதாவது அறியாமை உள்ளவரை ஒருவன் சூத்திரன்தான். ஸுக்ஞானம் - அதாவது 'பிரம்ம ஞானம்' வாய்க்கப் பெற்றால் ஒருவன் பிரம்ம ஞானி ஆகிறான். வேடர் குலத்தில் பிறந்த வால்மீகி பிரம்ம ஞானம் வாய்க்கப் பெற்றதால் பிரம்ம ஞானி என்று அழைக்கப் பட்டார் என்கிறார் வேமனா.

கல்வியைப் பற்றி வேமனா கொண்டிருந்த சிந்தனை நடைமுறைக்கு ஏற்றதாகக் காணப்படுகிறது. பலர் தமது படிப்பிலேயே பாதி ஆயுட்காலத்தைக் கழித்து விடுவதை பார்க்கிறோம். படிப்பு கருவத்தை ஏற்படுத்தி விடுவதாக அமைந்து விடக்கூடாது. படிப்பின் உட்பொருளை அறிய வேண்டியது முக்கியம். சிலர் சரித்திரங்கள் பல படித்துவிட்டு, ஆத்ம அனுபவத்தைப் பெற்றவர்களைப் போலத் திரிகிறார்கள். பேசியும் வருகிறார்கள். ஓவியமாக எழுதப்பட்ட விளக்கு எப்படி இருட்டைப் போக்கும்? அதுபோல்தான் ஏட்டுக் கல்வியும் என்கிறார் வேமனா.

கல்வியைப் பற்றிய சிந்தனையுடன் "உண்மையான குரு யார்?" என்னும் சிந்தனையும் அவரது மனதில் எழுகிறது.

நாயைத் தின்றவன் பரமகுருநாதன். பன்றியைத் தின்றவன் பரமயோகி. யானையைத் தின்றவன் 'ஸுக் ஞானி'. இக்கருத்துகள் நம்மைச் சிரிக்க வைக்கின்றன. ஆழ்ந்த பொருள் பொதிந்த கருத்துகள் இவை. நாய்க்கு வேலை இல்லை.

நிற்க நேரம் இல்லை என்பார்களே, அந்தக் குறிக்கோள் இல்லாத குணத்தைக் கொன்றவன் பரமகுரு நாதன். பன்றியைப் போல் உருமும் குணத்தை விட்டவன் எவனோ, அவனே பரமயோகி. யானை, தன்னைப் போன்ற பெரிய விலங்கு வேறெதுவும் கிடையாது என்று நினைக்குமாம் - அதைப் போலக் கருவம் என்னும் குணத்தை விட்டவனே 'ஸுக் ஞானி' எனப்படுவான்.

கல்வியில் ஆர்வமுள்ள மாணவன் நல்ல ஆசிரியரைத் தேடி அலைவது போல, தான் கற்ற கல்வியை யாருக்குக் கற்பிக்கலாம் என்று தேடி அலைபவரே சிறந்த ஆசிரியர் என்கிறார் வேமனா.

'கற்பூரம் போலக் கடலுப்பிருந்தாலும் கற்பூரம் ஆமோ' என்பது ஒரு தமிழ்ப் பாடல். நல்லவர் - கெட்டவர் இவர்களை வெளித் தோற்றத்தால் எடை போடுவது மிகவும் கடினம். உப்பும் கற்பூரமும் தொலைவிலிருந்து பார்த்தால் ஒன்று போலவே காணப்படுகின்றன. ஆனால் அவற்றைப் பயன்படுத்தும் போதுதான் உண்மையான குணத்தை அறிய முடிகிறது. அதுபோல் மக்கள் இனத்தி லும் அவரவர் செய்கையை வைத்தே நல்லவர், கெட்டவர் என்று தீர்மானிக்க வேண்டும்.

தங்கம் விலையுயர்ந்தது. தட்டினால் ஓசை வராது. வெண்கலமோ தங்கத்தைவிட விலை குறைந்தது. ஆனால் வெண்கலத்தில்தான் ஓசை அதிகமாக வருகிறது. கங்கை யாற்றைப் போன்ற புனித நதிகள் ஓசையில்லாமல் ஓடுகின்றன. ஆனால் அழுக்கு நிறைந்த சிற்றோடைகள் இரைச்சலுடன் ஓடுகின்றன. ஆன்றவித்தடங்கிய பெரியோர்கள் அமைதியாக இருக்கிறார்கள். அரைகுறை அறிவுள்ளவர்கள் சொற்களை வாரி இறைக்கிறார்கள். இந்தக் கருத்துகள் ஆடம்பரம் மிக்க இன்றைய சமுதாயத்திற்கு மிகவும் தேவைப்படுகின்றன அல்லவா ?

சூழ்நிலையைப் பற்றியும், மரபு நிலையைப் பற்றியும், உளவியல் அறிஞர்கள் பக்கம் பக்கமாக

எழுதிக் குவித்திருக்கிறார்கள். நல்ல சூழ்நிலை ஒருவரின் மரபுக் குணங்களை மாற்றுமா என்னும் ஆராய்ச்சியும் நடந்த வண்ணம் உள்ளது. இதைப் பற்றி வேமனாவின் அணுகுமுறையைப் பார்ப்போம்.

**'எலுக தோலு தெச்சி ஏடாதி உதிகினா**
**நலுபு நலுபே காணி தெலுபு காது**
**கொய்ய பொம்மனி தெச்சி கொட்டினா பல்குனா**
**விஸ்வதா பிராம வினர வேமா'** - என்பது பாடல்.

எலியின் தோலைக் கொண்டு வந்து அதை ஓராண்டு கசக்கித் துவைத்தாலும் அதை வெண்மையாக மாற்ற முடியுமா ? முடியாதல்லவா ? அதுபோல்தான் மாற்ற முடியாத அம்சங்கள் பல உள்ளன. நாயின் வால் சுருண்டு விடும் தன்மையுள்ளது. அதை ஒருவர் இழுத்துப் பிடித் திருக்கும் வரை அது நிமிர்ந்திருக்கும். விட்டு விட்டால் மீண்டும் சுருண்டுவிடும்.

வலிமையில் குறைந்த ஒருவன், தனக்குச் சாதகமான சூழ்நிலை அமையும் போது தன்னைவிட வலிமையானவ னையும் வென்று விடுகிறான். அதேபோல அதிகமான வலிமையுள்ள ஒருவன் தனக்குச் சாதகமான சூழ்நிலை அமையாத போது தன்னைவிட வலிமை குறைந்தவரிடம் தோல்வி அடைகிறான்.

நீரில் இருக்கும்போது யானையையும் முதலை பிடித்து இழுக்கும். காரணம் முதலைக்கு வாய்த்த சூழ்நிலை. இது திருவள்ளுவர் தரும் செய்தி. இதே கருத்து வேமனாவின் பாடல் ஒன்றில் காணப்படுகிறது.

**‘நீன்ன லோனி முசலி நிகுடி யானுக பட்டு**
**பைட குக்கலு சேத பங்கபடுனு**
**ஸ்தான பலமு கானி தனபலமு காதயா**
**விஸ்வதா பிராம வினர வேமா’**

நீரில் இருக்கும்போது யானையைப் பிடித்த முதலை கரைக்கு வந்ததும் அதுவே ஒரு நாயிடம் தோற்றுப் போகும். காரணம் இட பலம்தான் என்கிறார் வேமனா.

தெய்வங்களைத் திருப்திபடுத்துவதாக நினைத்துக் கொண்டு மக்கள் அப்பாவி விலங்குகளைப் பலியிடும் காட்சி வேமனாவின் மனதைப் புண்படுத்தியது. ‘வாழும் ஓர் உயிரைக் கொல்வது கடவுளையே கொல்வதற்கு ஒப்பாகும். ஜீவனும் சிவனும் ஒன்று - இதை உணருங்கள். கடவுள் எப்போதும் அன்பே வடிவமாக இருக்கிறார். ஆகவே அன்பு வழியில் செல்லுங்கள். அப்போதுதான் இறைவனின் அன்பைப் பெற முடியும்’ என்கிறார் வேமனா.

உண்மையை பேச வேண்டும் என்பது தரும சாத்திரங்கள் கூறும் உபதேசம். ஆனால் எப்போதும் உண்மை எடுபடுமா? உண்மை பேசும் ஒருவனுக்குத் துன்பங்கள் சவால் விடுகின்றன. தீயவர்களின் முன்னிலையில் உண்மை பேசக் கூடாது. உண்மை பேசுபவர்களின் நடுவில் தான் நாமும் உண்மை பேச வேண்டும். அரிச்சந்திரன் உண்மையே பேசிப் புகழ் பெற்றான் என்கிறார் வேமனா.

ஒருவர் கோபம் கொள்வதால் பாதிக்கப்படுபவர் அவரது பகைவர் மட்டும் அல்ல. கோபம் யாரிடமிருந்து

பிறக்கிறதோ அவருக்கே அது தீங்கு பயக்கும் என்பது வள்ளுவர் வாக்கு.

வேமனா கூறுகிறார், 'மூக்கின் மேல் இருக்கும் கோபத்தால் காம, குரோத, லோப, மோக, மத, மாச்சர்யம் என்னும் ஆறு தீய குணங்கள் பிறக்கின்றன' என்று. அந்தக் கோபம் முடிவில் எமனின் கைகளில் கொண்டுபோய்ச் சேர்ந்து விடுகிறது என்கிறார் வேமனா.

தீங்கு செய்பவர்களுக்கும் நன்மை செய்யுங்கள். ஈனர், அழகிய பெண்கள், உத்தமர், ஞானியர் இவர்களிடம் சமயம் பார்த்துப் பேசுதல் வேண்டும்.

'ஆத்ம சுத்தி இல்லாத ஆசாரங்கள், தூய்மை யில்லாத பாத்திரத்தில் சமைக்கப்பட்ட உணவு, மனத் தூய்மை இல்லாத சிவ வழிபாடு -இவற்றால் ஒரு பயனும் இல்லை.'

'அழகிய பெண்களையும், செல்வத்தையும் தமது கண்களால் காணும்போதும், சுவையான உணவைப் பற்றிப் பிறர் பேசும்போதும் யோகிகள் என்றாலும் மனத் தளர்ச்சி அடைவார்கள்' என்கிறார் வேமனா.

ஏரியின் கரையை வளைவுகள் நீக்கி நிமிர்த்த முடியாதது போல, சிலரைத் திருத்த முயற்சி செய்வதும் வீண்.

**'பகை தீர்ந்தால் கோபம் தீர்ந்திடும்**
**கோபம் தீர்ந்தால் கோரிக்கை தீர்ந்திடும்**
**கோரிக்கை தீர்ந்தால் பேதங்கள் தீர்ந்திடும்**
**இராஜஸம், தாமஸம், சாத்விகம் என்னும்**
**மூன்று குணங்கள் தீர்ந்தால் முக்தி நிச்சயம் !'**

என்கிறார் வேமனா.

சிரிப்பை மூட்டிச் சிந்திக்க வைப்பது என்பது எல்லாக் கவிஞர்களாலும் இயலாது. வேமனா இந்தக் கலையில் கைதேர்ந்தவராக விளங்குகிறார்.

"இலங்கையைக் கடக்கத் தடையாக இருந்த கடலை நோக்கித் தனது இராமபானத்தை விட்டாராம் இராமர். கடல் முழுவதும் வற்றிப் போய்விட்டதாம். கடல் நீரையே வற்றிப் போகும்படிச் செய்யும் வலிமை பெற்ற இராமர் தனது பலத்தால் இலங்கைக்கு ஒரு பாலத்தை ஏன் அமைத்திருக்கக் கூடாது ?" என்று கேட்கிறார் வேமனா.

"பெரிய ஞானிகள் மக்கள் மத்தியில் வாழ மாட்டார்கள் என்றும், காடுகளில்தான் வாழ்வார்கள் என்றும் மக்கள் நினைத்து வருகிறார்கள். அப்படிப் பட்ட ஞானிகளை அவர்கள் மோட்ச உலகுக்கு வழி காட்டுவார்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால் காட்டில் வழியே போகும்போது கொடிய விலங்கு ஒன்றை அவர்கள் சந்திக்கலாம். அது அவர்களின் மோட்ச உலகுக்கு வழி காட்டும்" என்கிறார் வேமனா.

"கருமிகளிடமிருந்து காசைக் கறக்க முடியாது என்பதற்கு வேமனா காட்டும் உவமை வேறு எவரும் காட்டாத உவமையாகும். சில ஆடுகளின் கழுத்தில் பால் சுரக்கும் காம்புகளைப் போன்ற இரண்டு உறுப்புகள் காணப்படுகின்றன. ஆனால் அவற்றைக் கரந்தால் பால் சுரக்குமா ? அதுபோல்தான் கருமிகளிடமிருந்து கருணையை எதிர்ப்பார்ப்பதும். கருமி தேனீயைப் போன்றவன். அவனது செல்வம் அவனுக்கே கூடப் பயன்படாது."

வெளித் தோற்றத்தைப் பொறுத்தவரை அத்திப் பழம் அழகானதுதான். ஆனால் அதற்குள்ளே புழுக்கள் நிறைந்திருக்கும். கோழை அத்திப்பழம் போன்றவன். வாய் வார்த்தைகளால் வீரம் பேசுபவன் பிரச்சினைகளை சமாளிக்க வேண்டிய நேரத்தில் ஓடி ஒளிந்து கொள்வான்.

வேமனா பெண்களை இழிவுபடுத்திப் பாடியிருப்ப தாகச் சிலர் கருதக்கூடும். அவருடைய தாக்குதல்கள் எல்லாம் விலை மாதரையும், அவர்களின் காமத் தீயில் விழும் ஆண்களைப் பற்றியுமே. குடும்பப் பெண்களை இழிவுபடுத்தியதாகப் பாடல்கள் இல்லை. யாரையும் துறவு போகும்படித் தூண்டவில்லை அவர். பெண்களைப் போகப் பொருளாக நினைத்து நாட்களை வீணாக்க வேண்டாம். மனிதனுக்கு வேறு கடமைகளும் உள்ளன என்று நினைவூட்டி நல்வழி காட்டியவர் யோகி வேமனா. பிறவியிலேயே அவர் யோகி ஆகிவிடவில்லை. இல்லறத்தில் வாழ்ந்து பெற்ற அனுபவங்கள் அவரது பாடல்களில் காணப்படுகின்றன.

வேமனாவின் கருத்துக்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம் என்கிறார் டாக்டர் ஜி. சுப்பாராவ். மென்மையான பூக்களைப் போன்றவை சில. கேட்பவர் இதயத்தை அம்பினால் தைப்பது போன்ற நுட்பமானவை சில. சிந்தனையைத் தூண்டுபவை சில. நான்காம் வகை நடைமுறைக்கு ஏற்ற அறிவுரைகளை அன்புடன் கூறுபவை.

❀ ❀ ❀

# வேமனாவின் கவிதைகள்

1. *'ஈ கபட நாடகம் புன'*

உலகமாம் நாடகக் கபட நடிப்பில்
பேசிடும் வசனம் ஈசுவரத் தியானம்
செய்திடும் வண்ணம் செய்தஅக் கள்வனை
சரணம் சொல்லித் துதிப்பாய் வேமா.

2. *'கள்ள குருடு கட்டுனெல்ல கர்மம்புலு'*

கள்ள குருவுக்குக் கணக்கிலாச் சடங்குகள்
மத்திய குருவுக்கு மந்திர தந்திரம்
உத்தம குருவுக்கு யோக சாம்ராஜ்யமே
விசுவதா பிராம கேளாய் வேமா.

3. *'தல்லி தன்றி மீத தயலேனி புத்ருடு'*

புற்றில் கரையான் இருந்தென்ன போயென்ன
தாய் தந்தை மீதன்பு இல்லாத புத்திரன்
பிறந்தென்ன பிறவாமல் போயென்ன
விசுவதா பிராம கேளாய் வேமா.

4. *'தனமதி கபடமு லுண்டின'*

மனதில் கயமை நிறைந்திருப்பவன்
பிறரையும் கயவர் என்று நினைப்பான்
நெஞ்சினில் தூய்மை உள்ளவர் பிறரையும்
நல்லோர் என்று நினைப்பார் வேமா.

5. ***'கண்டி காவரமுன காணடு மரணமிபு'***

கண்ணின் கொழுப்பால் மரணத்தை அறியான்
மதத்தின் கொழுப்பால் தத்துவம் அறியான்
போக வாஞ்சையால் சிவம்தனை அறியான்
விசுவதா பிராம கேளாய் வேமா.

6. ***'உதகமு லோபலி தத்வமு'***

தண்ணீரில் உள்ள தத்துவம் தன்னை
தேடிக் கண்டு மனதில் பொதிந்து
நீருக்கு நிகராய் தத்துவம் மதிப்பவன்
தத்துவ சொரூபியாம் அறிவாய் வேமா.

7. ***'யோனிலோன புட்டி யோனிலோன பெரிகி'***

யோனியில் பிறந்து யோனியில் வளர்ந்து
யோனியில் பரவெளி காண மாட்டாமல்
யோனியைப் பார்த்தே யோகத்தை மறந்தார்
விசுவதா பிராம கேளாய் வேமா.

8. ***'நீடிலோன நோட நிகடி தின்னகப்பிராகு'***

நீரில் ஓடம் நன்றாய் ஓடும்
நிலத்தில் ஓரடி நகர முடியுமா ?
தன்னிலை மாறினால் தலைவனும் தோற்பான்
விசுவதா பிராம கேளாய் வேமா.

9. ***'ஆத்ம சுத்திலேனி ஆசாரம் அதி ஏல'***

ஆத்ம சுத்தி இல்லா ஆசாரம் ஏனோ ?
பாத்திர சுத்தி இல்லா பலகாரம் ஏனோ ?
சித்த சுத்தி இல்லா சிவபூசை ஏனடா ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

10. *'பல்வன மனகா நேமிபு'*

வனிதையை வலம்வரும் வாலிபப் பருவம்
குமரப் பருவம் நடுத்தர வயதாம்
நாடிகள் நடுங்கும் அந்திம காலம்
சிவம்தனை சிந்தனை செய்திடு வேமா.

11. *'மலமூத்ர ரத்தமுல மாம்சமுல'*

மலசலம் இரத்தம் மாமிசப் பிண்டம்
துர்நாற்ற உடலும் நீரில் குளிப்பதால்
வெளிமாசு நீங்கிடும் உள்மாசு நீங்குமா
விசுவதா பிராம கேளாய் வேமா.

12. *'பப்பு லேனி கூடு பருலுக ஸஹ்யமவ்'*

பருப்பில்லாச் சோறு விருந்தினர் விரும்பார்
கடனில் லாதவன் பலசாலி ஆவான்
காமத்தை வென்றவன் யோகி ஆவான்
ஆய்ந்து தெளிந்து அறிவாய் வேமா.

13. *'லெக்க லேனி ஆசலு இய்யமை யுண்டுனு'*

நோக்கம் ஏதுமின்றி நாய்அலை வதுபோல்
பேராசை கொண்ட மனிதன் என்பவன்
ஆசைகள் தீர்ந்திட அலைந்து திரிவான்
விசுவதா பிராம கேளாய் வேமா.

14. *'பக்தி கல்கின வெஞ்ச பலமாது பிலசின'*

ஆசையோடு அழைக்கிறாள் வேசி என்றால்
ஆசையா அது ? பணம்கரந் திடுவம் வழி
எமதர்மன் புகுந்த வீடுதான் தப்புமா ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

15. ***'ஆடுவாரிகி அன்ன நர்தம்பு பொடகன்ன'***

பெண்களைக் கண்டதும் பணம்தனைக் கண்டதும்
அறுசுவை உணவின் பெயரைக் கேட்டதும்
போகிகள் ஆயினும் யோகிகள் ஆயினும்
மனம்தளர் வார்களே கேட்டிடு வேமா.

16. ***'சன்னுலு அண்டிதி சம்பத'***

பெண்களின் மார்பினைப் போன்றது செல்வம்
சிலநாள் நிமிர்ந்து சிலநாள் சரியும்
நிலவொளி இருள்வெளி போன்றது செல்வம்
சிவன்மேல் ஆணையாய்ச் சொல்கிறேன் வேமா.

17. ***'காகி கூடிலோன கோகிலம் உன்னட்லு'***

காகத்தின் கூட்டில் குயில்இருப் பதுபோல்
வண்டின் கூட்டில் புழுவாழ் வதுபோல்
பரமனை நினைத்துப் பரமனாய் ஆவாய்
விசுவதா பிராம கேளாய் வேமா.

18. ***'அனக அனக ராகமதிஸ இல்லுக ஹுண்டு'***

பாடப் பாட இராகம் இனிமையாம்
தின்னத் தின்ன வேம்பும் இனித்திடும்
சாதகம் செய்தால் ஆகாத துண்டோ ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

19. ***'மண்டி குண்ட அண்டி மாய சரீரம்பு'***

மண்பானை போன்றது மாய சரீரம்
சாவு வந்தாலும் சாகாது ஆன்மா
பானைகள் பலவகை வான்வெளி ஒன்றே
விசுவதா பிராம கேளாய் வேமா.

20. ***'தீபம்பு லேனி இண்டனு'***

விளக்கில்லா வீட்டில் தெரியுமா உருவம் ?
விளக்காய் விளங்கும் தெளிந்த ஞானிகள்
பாவம் ஒழித்து புண்ணியம் சேர்க்கும்
வழிகளைத் தேடுவார் கேளாய் வேமா.

21. ***'கோபமு னனிகனத கொஞ்ச மைபோவுனு'***

முன்கோப குணத்தினால் கௌரவம் குறைந்திடும்
முன்கோப குணத்தினால் பாவி ஆகுவான்
கோபத்தை விட்டிடில் கோரியது நடக்கும்
விசுவதா பிராம கேளாய் வேமா.

22. ***'சீம குட்டே னேனி சிவுகனி பிஞ்கனு'***

எறும்பு கடித்தால் சுறுக்கென வலிக்கும்
எறும்பே சிறிதெனில் அதன்உயிர் பெரிதா ?
எறும்பினைப் போன்ற சற்குரு நாதனை
நாடிநீ அறிவாய் கேட்டிடு வேமா.

23. ***'ராஜவருல கெபுடு ரணரங்கமுல சிந்த'***

அரசருக்கு என்றும் போரின்மேல் ஆசை
யோகியர்க்கு என்றும் பரம்பொருள் ஆசை
அற்பருக்கு என்றும் பெண்கள்மேல் ஆசை
விசுவதா பிராம கேளாய் வேமா.

24. ***'கங்க கோவு பாலு கெண்டடை னனுசாலு'***

காராம் பசும்பால் கரண்டி போதும்
கழுதையின் ஒருகுடம் பாலால் பயன் ஏது ?
அன்புடன் தருவது கூழ்என் றாலும்
அமிழ்தினும் இனிதாம் கேளாய் வேமா.

25. ***'லோகமந்து புட்டி லோகமந்து பெருகி'***

உலகினில் பிறந்து உலகினில் வளர்ந்து
உலகினில் புகழுக்கு அடிமை ஆகி
உலகின் மாயையில் மாய்ந்து போவார்
விசுவதா பிராம கேளாய் வேமா.

26. ***'சதுவு சதுவனேல சந்யாசி கானேல ?'***

படித்துப் படித்துநீ சந்யாசி ஆவதேன் ?
ஆறு மதங்களில் சிக்கி அழிவதேன் ?
நினைத்துப் பார்த்து சிந்தையில் தெளிவாய்
விசுவதா பிராம கேளாய் வேமா.

27. ***'பந்தி பின்னலினு பதியுனை தின்டினி'***

பன்றி ஈன்றிடும் பதினைந்து குட்டிகள்
யானை ஈன்றிடும் தடவைக்கு ஒன்றினை
உத்தமன் பிறந்தால் ஒருவனே போதுமே
விசுவதா பிராம கேளாய் வேமா.

28. ***'பாலு கலயுநீரு பாலவரா ஜில்லு'***

பாலுடன் கலந்தநீர் பாலைப் போலவே
மாறிடும்; குடித்தால் பால்போல் சுவைதரும்
சான்றோர் சகவாசச் சேர்க்கையால் மூடனும்
நற்கதி பெற்று உயிர்வான் வேமா.

29. ***'நீக்கலைன மனிசி நலமொக்கடே சாலு'***

கரடு முரடான கற்களால் பயனென்ன ?
மாணிக்கக் கல்லுக்கு அவைசமம் ஆகுமா ?
பயன்படா நூல்பல கற்பதைக் காட்டிலும்
பயன்தரும் ஒருநூல் போதும் வேமா.

30. ***'தேளுவண்டி தானி தெலியகொண்ட விஷமு'***

தேளுக்கு நஞ்சு கொடுக்கில் மட்டுமே
பாம்புக்கு நஞ்சு பல்லில் மட்டுமே
வஞ்சகர் நஞ்சோ உடம்பு முழுவதும்
விசுவதா பிராம கேளாய் வேமா.

31. ***'தாமசிஞ்சி சேயதகா தெட்டி கார்யம்பு'***

அவசர காரியம் காரிய தாமதம்
அரைவேக் காடு பலன்கிட் டாது
பசுங்காய் மனிதரால் கனிந்து விடாது
செடியிலே பழுத்தால் சுவைதரும் வேமா.

32. ***'அஞ்ஞானமுமெ சூத்ர தத்வமு'***

அறியாமை என்பது சூத்திர தத்துவம்
மெய்ஞ்ஞானம்வாய்த்திடில் அவனே பிராம்மணன்
அறியாமை நீங்கிய வால்மீகி வேடன்தான்
பிரம்மரிசி ஆனான் அறிவாய் வேமா.

33. ***'பொந்தெ எவரி சொம்மு போஷிம்ப பலுமாரு'***

உடல், யார் சொத்து போற்றி வளர்கிறாய் ?
உயிர், யார் சொத்து போற்றிக் காக்கிறாய் ?
பொருள், யார் செல்வம், கடைசியில் உதவுமா ?
தருமமே உன்பொருள் கேளாய் வேமா.

34. ***'அல்பு டெபுடு பல்குனு ஆடம்பரமுகானு'***

அற்பனுக்கு எப்போதும் டம்பப் பேச்சு
அறிவாளி என்பவன் நளினமாய்ப் பேசுவான்
வெண்கலம் போலப் பொன்ஓசை இடுமா ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

35. ***'வெர்ரி வானிகைன வேஷதாரிகி அய்ன'***

பித்தர் ஆயினும் வேட தாரிகள்
ரோகிகள் ஆயினும் யோகிகள் ஆயினும்
பெண்களைக் கண்டதும் புத்தி மாறிடும்
உலகின் இயல்பிது கேளாய் வேமா.

36. ***'சித்த சுத்தி கல்கி சேசின புண்யம்பு'***

சித்த சுத்தியாய் செய்திடும் புண்ணியம்
மிகச் சிறிதெனினும் பயன்பெரி தாகும்
விதைசிறி தாயினும் மரம்பெரி தாகும்
விசுவதா பிராம கேளாய் வேமா.

37. ***'முக்கு கோபமுனு மோவா லோபம்புனு'***

மூக்கின் மேல் கோபம் மோக லோபம்*
நாயின் கோபக் குணத்தையும் வென்றிடும்
கோபம் எமனின் கைகளில் சேர்க்கும்
நரகக் குழியின் விழுவார் வேமா.

38. ***'பங்கஜாட்சுலுகைன பங்காரு பொடகைன'***

பெண் பொன் இவற்றைக் கண்ட உடனே
யோகியும் கூட மனம்மாறிப் போவான்
மெய், வாய், கண், மூக்கு, செவியின் சுவையைக்
கட்டுக்குள் வைப்பவன் யோகி வேமா.

39. ***'ஜாணலை புருஷுல சபலார தாட்கல'***

உத்தமக் கணவன் மனையாள் மனமறிந்து
அவளது காமம் தீர்த்திட வேண்டும்
கேவலம் அன்பிலா உடல்மேல் ஆசையால்
நாசமே விளைந்திடும் கேளாய் வேமா.

* லோபம் = பேராசை

40. ***' மருவவலெ பாவ சங்கதி'***

பெண் பொன் மோகம் பாவிகள் நேசம்
    பொருள்மேல் ஆசையை நிச்சயம் மறந்திடு
பிறர் செய்யும் தீங்கினை மறந்திட வேண்டும்
    செய்ந்நன்றி என்றும் மறவாய் வேமா.

41. ***' உச்ச வோன காமம் ஒச்கடன தலிஞ்சி '***

மூத்திர துவார வழிவரும் விந்துஅணு
    அதேவழியில் மனிதனாய் பிறந்தது
அருவெறுப் பாகிய இடத்தில் பிறந்த
    மனிதரில் உயர்ந்தோர் யார் ? கூறு வேமா.

42. ***'காவுகாவு மனுக கருணதோ ஏட்கக'***

'அம்மா' என்று அன்புக்கு ஏங்கி
    அழுது இளைத்துச் சோர்ந்திடும் குழந்தைக்கு
பாலைத் தந்திடும் பெண்ணுக்குப் புண்ணியம்
    அநேகம் உண்டு கேளாய் வேமா.

43. ***' ப்ரியமு வேனி விந்து பிண்டி வண்டல சேடு '***

அன்பிலா விருந்தினால் பலகாரக் கேடு
    பக்தியிலாப் பூசையால் பூக்கள் வீணாகும்
இல்லறம் அறியாக் கணவன் - மனைவியால்
    வீடும் கேடாம் கேளாய் வேமா.

44. ***'முட்டு வோன புட்டி முட்டண்டு குனுரோசி'***

மாதத் தீட்டென்னும் குருதியில் பிறந்தோம்
    மாதர்கள் சிந்திடும் குருதி தீட்டாம்
குளித்தால் போகுமா ? குளித்த பின்னும்
    உள்ளிருப் பது எது ? குருதிதான் வேமா.

46. *' ராமுடு ஒகடேபுட்டி ரவிகுலமு ஈடேர்சே '*

இராமன் பிறந்து இரகுகுலம் காத்தான்
குருபதி* பிறந்து குலத்தைக் கெடுத்தான்
புண்ணிய பாவம் அவரவர் செயல்களே
பிறர்செயல் அல்ல கேளாய் வேமா.

47. *' தனமுகூட பெட்டி தர்மம்பு சேயக '*

செல்வம் சேர்ந்து தருமம் செய்யாமல்
தானும் உண்ணான் கருமி ; தேனை
தேடிச் சேர்க்கும் தேனீயின் குணம் அது
விசுவதா பிராம கேளாய் வேமா.

48. *' தானமுல சேய தனசேது லாடக '*

தானம் செய்திடும் நற்குணம் இன்றி
செல்வம் சேர்த்துப் புதைத்து வைத்து
சாவான் 'கருமி' என்னும் பெயருடன்
விசுவதா பிராம கேளாய் வேமா.

49. *' நீள்ளமீத புக்க நிலிசின அப்புடு '*

நீர்மேல் நிற்கும் குமிழி ; அப்போது
வேகமாய் வரும்நீர் குமிழியை உடைக்கும்
மண்பானை இதன்மேல் அபிமானம் கொள்வதேன்?
விசுவதா பிராம கேளாய் வேமா.

50. *' அடவி திருகலேது ஆகாசமுன லேது '*

காட்டிலும் இல்லை வானிலும் இல்லை
புனிதநீர் ஆடலில் இல்லவே இல்லை
மனத்தூய்மை செய்து மகேசனைக் காண்பாய்
விசுவதா பிராம கேளாய் வேமா.

* குருபதி = துரியோதனன்

51. ***' காடிதே பெருங்கு கந்தம்பு வாசன '***

கழுதை அறியுமா சந்தன வாசனை
சிறிதென்று பெரிதென்று நாய் அறிந்திடுமோ,
அற்பன் அறிவானா சிவபூசை முறைகளை ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

52. ***' பால்ய மந்து சிவுனி பரிகிம்ப காலேரு '***

பால்ய வயதில் பரமனை நினையார்
இளமைப் பருவமும் முதுமைத் துன்பமும்
பரமனை மறைக்கும் திரைகள் ஆகும்
விசுவதா பிராம கேளாய் வேமா.

53. ***' ராஜு மாடவலெனு ரசிகுடு ஆடகவலெ '***

அரசன்* சொற்படி சேவகர்** நடப்பார்
சேவகர் மறுத்தால் அரசன் கண்டிப்பான்
துள்ளாட்டம் ஆடுவோன் பேயினும் கீழ்மகன்
விசுவதா பிராம கேளாய் வேமா.

54. ***' பாஷலாட நேர்சி பரகப்ரியமுலு பலிகி '***

வாயடி அடித்துத் தேனாய்ப் பேசி
யாசகம் செய்பவன் பாமரன் ஆவான்
பரமனை அறிபவன் முக்தி பெறுவான்
விசுவதா பிராம கேளாய் வேமா.

55. ***' கூடு ஏமி ஜேசே குலமேமி ஜேசெனு '***

சோறு என்செய்யும் ? குலம் தான் என்செய்யும் ?
பூமி என்செய்யும் ? எண்சாண் கூடு
படுகின்ற பாடு சிரிப்பாய் உள்ளது
விசுவதா பிராம கேளாய் வேமா.

---

* அரசன் = பரம்பொருள் **சேவகர் = உயிரினங்கள்

56. ***' தல்லி கர்ப்பமுனனு தாவெடலி நபுடு '***

தாய்மடி இருந்து வெளியான போது
ஆடையா கட்டினோம்? ஆராய்ந்து பார்த்தால்
இடுப்பாடை அணிவது நகைப்பாகும் அல்லவா !
விசுவதா பிராம கேளாய் வேமா.

57. ***' வேத வித்ய லெல்ல வேஸ்யல வண்டிதி '***

வேத வித்தைகள் வேசிகள் போன்றவை
பிரமிக்கச் செய்பவை தெளிவு தராது.
பிரம்ம வித்தையே* குலமகள் போன்றது
விசுவதா பிராம கேளாய் வேமா.

58. ***' ஸ்திரீல சண்ட்லு பூல சண்ட்லகு போல்துரு '***

பெண்களின் மார்பகம் பூச்செண்டு என்பார்
பாலைத் தந்திடும் மாமிசப் பிண்டப்
பந்துகள் எப்படிப் பூச்செண்டு ஆகிடும் ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

59. ***' ஆலி சிக்கு ஜெருச்க அகில அர்த்தமு லந்து '***

'திதி செய்யும்போது கருமம் கழிந்திட
தானம் செய்' என்று தாயும் அரிப்பாள்
கண்ணில் கண்ட பொருள் எல்லாம் கேட்டு
மனைவி அரிப்பாள் கேளாய் வேமா.

60. ***' வானராக டமரி ப்ராணம்பு போகட'***

புயல்மழை வருவதும் உடல்உயிர் போவதும்
எத்தன்மை யோரும் அறியார் இதனை
அறிந்தவன் தன்னை கலி என்ன செய்யும் ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

61. *‘ சூர்யனி பொடகன்ன கோலக விகசிஞ்க ’*

கதிரவன் ஒளியில் தாமரை மலரும்
சந்திரன் ஒளியில் அல்லியும் மலரும்
வெள்ளி முளைத்தால் உதயம் - இம்மூன்று
ஒளியினும் வேறு ஒளி* உண்டு வேமா.

62. *‘ நீள்ளு போசி கடிகி நித்யம்பு சோதிஞ்சி ’*

தண்ணீர் ஊற்றி நித்தமும் குளித்து
தீனியை நிரப்பித் துணியைச் சுற்றி
எப்பாடு படுகிறீர் தேகக் கட்டைக்கு
விசுவதா பிராம கேளாய் வேமா.

63. *‘ குலமுலலோன ஒகடு குணவந்துடு உண்டின ’*

காட்டின் நடுவில் சந்தன மரம்போல்
குலத்துக்கு ஒருவனாய் குணவான் இருந்தால்
அவனது குணத்தால் குலம் மிக விளங்கும்
விசுவதா பிராம கேளாய் வேமா.

64. *‘ ஆடி தப்புவார லபிமான ஹீனுலு ’*

சொல்சோர்வு அடைந்தவன் அபிமானம் அற்றவன்
துன்பம் அறியாதவன் அற்பன் ஆவான்
கூடிக் கெடுப்பவன் கல்மனத் தான் அவன்
கசாப்புக் கடைக்காரன் ஆவான் வேமா.

65. *‘ மகனி காலமந்து மகுவ கஷ்டிஞ்சின ’*

கணவனால் துன்பம் அடைந்த ஒருத்தி
மகன்களின் அன்பால் இன்பம் அடைவாள்
இன்பமும் துன்பமும் மாறியே வந்திடும்
உலகினில் எவர்க்கும் அறிவாய் வேமா.

---

* பிரம்ம வித்தை = மூலப் பொருளை அறியும் உபாயம்.

66. ***' சதிவி சதிவி சதிவி சதுவங்க சதுவங்க '***

படிக்கப் படிக்க படித்திடப் படித்திட
படிப்புப் படித்துக் கொஞ்சமே படித்து
படிப்பின் உட்பொருள் படித்திட வில்லையே
விசுவதா பிராம கேளாய் வேமா.

67. ***'கண்டி காவரமுன காண்டு மரணம்பு'***

கண்ணின் கொழுப்பினால் மரணத்தை அறியான்
மதத்தினால் தத்துவ உண்மையைத் தேரான்
போகத்தின் வாஞ்சையால் சிவனைக் காணான்
விசுவதா பிராம கேளாய் வேமா.

68. ***'ஆட தானி பொங்கு கோட பெட்டினரீதி'***

பெண்களின் பொய் வீட்டுச் சுவர்களைப் போன்றது
ஆண்களின் பொய் வீட்டுக் கூரைத் தடுக்கு
பெண்களின் சாகசம் கருங்கல் போன்றது
விசுவதா பிராம கேளாய் வேமா.

69. ***'யவ்வனமுன ஜுட யதிபெரு கயுலேது'***

யௌவன வயது அவனைஅறியாது
யௌவனம் அவனையும் எட்ட விடாது
யௌவனம் தன்னையும் நினைக்க விடாது
இளமைப் பருவ இயல்பிது வேமா.

70. ***'கள்ளநிஜமு வெல்ல கரகண்டுடு எருகுனு'***

உண்மையும் பொய்யும் சிவனே அறிவான்
நீரின் ஆழம் நீர்தான் அறியும்
அன்னையே அறிவாள் மகனின் பிறப்பு
விசுவதா பிராம கேளாய் வேமா.

71. ***'கலிகி லட்டெயுண்டு கலுக்க யுண்டுனு'***

கிடைப்பதாய் காட்டிக் கிடைக்காமல் போகும்
கிட்டாமல் போனது மீண்டும் கிட்டும்
தேடிடும் பொருள்தனைக் காணவும் மாட்டார்
உலகோர் இயல்பிது கேளாய் வேமா.

72. ***'தன மெச்சின மத மெச்சகனு'***

செல்வம் சேர்ந்தால் கர்வமும் சேரும்
கர்வம் சேர்ந்தால் பொறாமை சேரும்
செல்வம் குறைந்தால் கர்வமும் குறைந்து
பொறாமையும் குறையும் கேளாய் வேமா.

73. ***'காலி காலி கலசே ககனம்பு ககனம்பு'***

நீருடன் நீர்கலந்து நிர்மலம் ஆனதுபோல்
காற்றுடன் காற்றும் வானுடன் வானும்
மண்ணுடன் மண்ணும் கலந்து எரிந்தன
விசுவதா பிராம கேளாய் வேமா.

74. ***'ஸ்வானுபூதி லேக சாஸ்திர வாசனலசே'***

சித்திர விளக்கினால் இருளும் நீங்குமா ?
சாத்திரம் மட்டும் படித்து விட்டு,
"சிவானு பூதி*யைக் கண்டோம்" என்று
பேசித் திரிபவர் உண்டு வேமா.

75. ***'உப்பு கற்புரம்பு னொக்க போலிக யுண்டு'***

கற்பூரம் உப்பு ஒன்றுபோல் தோன்றும்
உற்றுப் பார்த்தால் சுவைமணம் வேறாம்
மனிதர்க்கு உள்ளும் உத்தமர் தனியாய்
காட்சி தருவார் கேளாய் வேமா.

---

* சிவானுபூதி = 'சிவம்' என்பதன் அனுபவ அறிவு

76. ***' கங்க பாரு அண்டு கதலனி நதிதோட '***

கங்கைபோல் ஆறுகள் அமைதியாய் ஓடும்
அழுக்கு நீர் ஓடைகள் சலசலத்து ஓடிடும்
தாத்தாவின் பொறுமை தம்பிக்கு வருமா ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

77. ***' ஹ்ருதய மந்துன்ன ஈசுனி தெலியக '***

உள்ளத்தில் உள்ள ஈசனை அறியாது
சிலைகளை வணங்கிப் பெறும்பயன் என்ன
சிலைகளில் இருக்குமா பரம்பொருள் ஈசன் ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

78. ***' ஜீவுலெல்ல முந்து ஜீவாத்ம பரமாத்ம '***

ஜீவனும் பரமனும் ஒன்றென அறிந்ததாய்
பாவக் கடலில் வீழார் சான்றோர்
படகு விடுபவன் நட்டாற்றில் வீழான்
விசுவதா பிராம கேளாய் வேமா.

79. ***' குக்க தின்னவாடு குருலிங்க ஜங்கம்பு '***

நாயைத் தின்றவன் பரம குருவாம்
பன்றியைத் தின்றவன் பரம யோகி
யானையைத் தின்றவன் நல்ல ஞானி
விசுவதா பிராம கேளாய் வேமா. *

* நாயைத் தின்றவன் = குரைக்கும் குணத்தை விட்டவன்
பன்றியைத் தின்றவன் = உறுமும் குணத்தை விட்டவன்
யானையைத் தின்றவன் = தானே பெரியவன் என்னும், யானையின் அகந்தை குணத்தை விட்டவன்

80. ***'நித்யம்பு சானி பொடயுடு'***

விலையில்லா உடல்தன்னை காத்திட நித்தமும்
அளவில்லாக் கவலைப் படுவார் உலகோர்
நித்தியா னந்தப் பதவியை அடைய
சிறிதும் கவலைப் படுவரோ வேமா ?

81. ***'இட்டி கனுல பிரம்ம பெட்லு கூடக வச்க'***

மாயையை அகற்றிப் பிரம்மத்தை அறிக
ஊனக்கண் வேறு ஞானக்கண் வேறு
தனக்குள் மறந்து பார்த்திட வேண்டுமே
விசுவதா பிராம கேளாய் வேமா.

82. ***'சம்பதகின அட்டி சத்ருவு தனசேத'***

கொல்வதற்கு உரிய பகைவன் நம்கையில்
கிடைப்பினும் அச்செயல் செய்திட வேண்டாம்
விரும்பிடும் பொருள்தந்து அவனை அனுப்பிடு.
அதுவே நாம்தரும் தண்டனை வேமா.

83. ***'வெதுக வெதுக தொருகு வேதாந்த வேத்யுண்டு'***

தேடிடத் தேடிடத் தெரிவான் ஆசான்
தேடிடும் ஒருவனை நாடியும் வருவான்
தேடியும் கிடைப்பான் நாடியும் வருவான்
ஆசான் போல்தான் பிரம்மமும்* வேமா.

* பிரம்மம் = ஒப்பற்ற முழு முதல் பொருளுக்கு தத்துவ அடிப்படையில் கூறப்படும் பெயர். உண்மையான அறிவு இன்ப வடிவமாய் உலகம் முழுவதும் தோன்றி ஒடுங்குவதற்கு இடமாக உள்ள ஒரு பொருள்.

84. *' எலிக தோலு தெச்சி ஏடாதி யுதிகினா '*

எலியின் தோலை ஆண்டெலாம் அலசினும்
கறுப்பு நிறம்நீங்கி வெள்ளை ஆகுமா ?
மரப்பாவை தனைபிடித்து அடித்தாலும் பேசுமா ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

85. *' ஜனன காலமுண்டி ஜன்னிதாட்ரு லேவு'*

பிறந்த போதும் பூணூல் இல்லை
பெண்களுக்கு இந்தச் சடங்கே இல்லை
இடையில்இச் சடங்கினால் சிரிப்பு வராதா ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

86. *' ஸத்யம மரியுண்ட ஞானம மரியுண்டு'*

உண்மையின் இருப்பிடம் அறிவின் இருப்பிடம்
அறிவின் இருப்பிடம் உண்மையின் இருப்பிடம்
இரண்டும் சமமாய் எவனிடம் உள்ளதோ
அவனே பிராம்மணன் அறிவாய் வேமா.

87. *' பெக்கு சதுவு லேல தர்க்க சாஸ்த்ரமுலேல'*

பயனில்லாப் படிப்பேன்? தர்க்கசாத் திரங்கள்ஏன்?
ஒருமனச் சிந்தையாய் ஒருவன் வாழ்ந்திடில்
எல்லாம் கைகூடும் எதுவும் அப்பொருளே
விசுவதா பிராம கேளாய் வேமா.

88. *' ஞானிகி கர்மம்பு ஏடிகி '*

ஞானியின் கடமை எதுவெனக் கேட்டால்
ஞானியின் கடமை ஜபமும் தவமும்
ஞானமே கடமை என்றால் இந்த
பூமியில் நிச்சயம் முக்தி* வேமா.

---

* முக்தி = வீட்டுலகம்

89. *'கச்சலு காமுலு கூடுக'*

ஆண்பெண் சேர்க்கையால் பிறக்கும் மனிதரில்
பிராம்மணன் யாரோ சூத்திரன் யாரோ
இருவரும் பிறந்தது பெண்ணின் யோனியில்
ஆகவே அனைவரும் சமம்இங்கு வேமா.

90. *'பகலரூப வேற பாலொக்க வர்ணமவ்'*

பசுக்களோ பலநிறம் பாலோ ஒருநிறம்
மலர்களும் பலநிறம் பூசையோ ஒன்றுதான்
தரிசனம் பலவகை ஆண்டவன் ஒருவனே
விசுவதா பிராம கேளாய் வேமா.

91. *'தனகு ஜேயு மேலு தாதெலியக நேர்ச்சு'*

நாயின் குணமோ உணவு இட்டவர்க்கு
உயிருள்ள அளவும் நன்றி காட்டுதல்
ஆனால் மனிதன் செய்நன்றி தன்னை
உடனே மறப்பது அவன்குணம் வேமா.

92. *'எருகுவானி தெலுப எவ்வடைனனு சாலு'*

படிக்கும் ஆர்வம் உள்ளவன் படிப்பான்
மூடனைப் படிப்பிக்க யாரால் முடியும்?
ஏரிக் கரையின் கோணலை நிமிர்த்த
யாரால் முடியும் கூறிடு வேமா.

93. *'உத்த போத்த முண்டு தத்வக்னுடில பீத'*

உத்தமன் என்பவன் தத்துவம் அறிந்தவன்
மத்திமன் என்பவன் மகிமைகள் காட்டுவான்
அதமன் என்பவன் வெளிவேடம் போட்டு
வயிற்றை வளர்ப்பான் அறிந்திடு வேமா.

94. ***'மாட தித்தவச்சு மதினெக்கு வேகுண்ட'***

பேச்சைத் திருத்தலாம் பிழைஇல் லாமல்
கல்லையும் கனிந்திடச் செய்யலாம் ஆனால்
மனிதனின் மனத்தை மாற்றிட முடியுமா?
விசுவதா பிராம கேளாய் வேமா.

95. ***'இந்துலகை காளெ இந்திந்த பளாது'***

மதிமுக மங்கையர் காமத்தின் அளவெது?
நெருப்பை நெருங்கும் வெண்ணெய்யைப் போல
காம மோகங்கள் விந்தைகள் செய்யும்
விசுவதா பிராம கேளாய் வேமா.

96. ***'முக்கு மீத திருஷ்டி முருவுகா நிலிபின'***

மூக்கின் நுனியில் பார்வையை நிறுத்திடு
நிறுத்திப் பார்த்தால் பரமன் தோன்றுவான்
பரமனை மனதில் கொண்டவன் யோகியாம்
விசுவதா பிராம கேளாய் வேமா.

97. ***'தல்லி தண்ட்றி சாவ தானாலிதோ கூடி'***

தாய்தந்தை இறந்தபின் புதுவீடு கட்டி
மனைவி யுடனே மகிழ்வாய் வாழ்வது
தூக்கு மரத்தில் தொங்கும் திருடன்
சோறு கேட்பது போலாகும் வேமா.

98. ***'தண்ட்றி கன்ன கொடுகு தாகுனி யாபெளா'***

தந்தையைக் காட்டிலும் மகன்பெயர் பெற்றால்
இளையவன் என்று தள்ளிட வேண்டாம்
வணங்குவார் கண்ணனை அவனது தந்தை
வசுதேவனை அல்ல கேளாய் வேமா.

99. ***'என்னி நாள்ள துண்டி யெனசின மோகம்பு'***

யுகமெல்லாம் இந்த உலகினில் வாழ்ந்து
மோக வலையினில் வீழ்ந்த போதிலும்
தாய்தந்தை புத்திரர் தாயாதி என்றே
பாசத்தில் சிக்குவான் மனிதன் வேமா.

100. ***'மனசு பூனி கெலிசி மனசுலோ சுகிமிஞ்சு'***

மனத்தை அடக்கி மனதுக்குள் மகிழ்பவன்
நிலையான மோட்சம் கண்டு கொள்வான்
செடி வைத்த பலனும் கிட்டாமல் போகுமா ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

101. ***'நித்ர மேலு தெலிசி நிலுபடி மீலோன'***

நித்திரையின் மேன்மை தெளிக ; உள்நின்று
விழிப்புடன் பாய்ந்தோடி வந்திடும் ஆன்மா.
ஆன்மாவின் மௌனத்தில் பரமன் இருப்பான்
பரமனின் இருக்கையை அறிக வேமா.

102. ***'தோகலு கலவாட்டி தொடரி கொத்துலு கோசி'***

வாலுள்ள விலங்கை விரட்டிப் பிடித்தும்
ஆட்டின் கழுத்தை அறுத்துப் புசித்தும்
பலவகை உயிர்களைச் சுட்டும் தின்பார்
விசுவதா பிராம கேளாய் வேமா.

103. ***'ஏகட்டி தனபலம் எஞ்கதோ நோக'***

தனது பணபலம் ஒன்றையே நினைத்து
எதிரியைத் தாக்கினால், எதிரியின் துன்பமே
வாளாய் ஆகிடும் ; முற்றத்து வெயில்ஒளி
நீடித்து நிற்குமா சொல்லிடு வேமா.

104. *'பட்டு விடுபுலதிக பாக்யம்பு கல்கினா'*

கொடுக்கல் வாங்கல் செல்வச் செருக்கால்
பெரியோரைக் கூடப் பெரிதும் வைவான்
அற்ப புத்திக்காரன் பெரியோரை அறிவானா ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

105. *'ஆறு ருசிலு வேறு சாரம்பு ஒக்கடே'*

அறுசுவை பலப்பல சாரம் ஒன்றே
உண்மையை அறிந்திட வழிபல ஆயினும்
உண்மைப் பொருள் ஒன்று முனிவர் பலபேர்
மூலப் பொருள் ஒன்று அறிக வேமா.

106. *'கள்ளுகு இச்சினட்லு சல்லுகு இய்யலேரு'*

கள் குடிக்கு உதவுவார் நீர்மோருக்கு உதவார்
கள்வர்க்கு உதவுவார் நல்லவர்க்கு உதவார்
தாசிக்கு உதவுவார் தானத்திற்கு உதவார்
விசுவதா பிராம கேளாய் வேமா.

107. *'பாட மருகு சிக்கு மனுச லோகம் பெல்ல'*

மானிட உலகில் பேச்சளவே வெட்கம்
ஆடை குறைப்பதில் வெட்கம் இல்லையாம்
ஆபாச தாம்பத்யம் சொன்னால் வெட்கம்
இதைவிட வெட்கம் வேறென்ன வேமா.

108. *'பதி ஒப்பின சதி ஒப்புனு'*

கணவன் மனைவி ஒருவருக்கு ஒருவர்
குறிப்பறிந்து நடத்திடும் இல்லற வாழ்வில்
மோட்ச உலகம் நிலையாய் நிற்கும்
அங்கே பரமன் வாழ்வான் வேமா.

99. ***'என்னி நாள்ள துண்டி பெனசின மோகம்பு'***

யுகமெல்லாம் இந்த உலகினில் வாழ்ந்து
மோக வலையினில் வீழ்ந்த போதிலும்
தாய்தந்தை புத்திரர் தாயாதி என்றே
பாசத்தில் சிக்குவான் மனிதன் வேமா.

100. ***'மனசு பூனி கெலிசி மனசுலோ சுகிமிஞ்சு'***

மனத்தை அடக்கி மனதுக்குள் மகிழ்பவன்
நிலையான மோட்சம் கண்டு கொள்வான்
செடி வைத்த பலனும் கிட்டாமல் போகுமா ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

101. ***'நித்ர மேலு தெலிசி நிலுபடி மிலோன'***

நித்திரையின் மேன்மை தெளிக ; உள்நின்று
விழிப்புடன் பாய்ந்தோடி வந்திடும் ஆன்மா.
ஆன்மாவின் மௌனத்தில் பரமன் இருப்பான்
பரமனின் இருக்கையை அறிக வேமா.

102. ***'தோகலு கலவாட்டி தொடரி கொத்துலு கோசி'***

வாலுள்ள விலங்கை விரட்டிப் பிடித்தும்
ஆட்டின் கழுத்தை அறுத்துப் புசித்தும்
பலவகை உயிர்களைச் சுட்டும் தின்பார்
விசுவதா பிராம கேளாய் வேமா.

103. ***'ஏகட்டி தனபலம் எஞ்சுதோ நோக'***

தனது பணபலம் ஒன்றையே நினைத்து
எதிரியைத் தாக்கினால், எதிரியின் துன்பமே
வாளாய் ஆகிடும் ; முற்றத்து வெயில்ஒளி
நீடித்து நிற்குமா சொல்லிடு வேமா.

104. ***'பட்டு விடுபுலதிக பாக்யம்பு கல்கினா'***

கொடுக்கல் வாங்கல் செல்வச் செருக்கால்
பெரியோரைக் கூடப் பெரிதும் வைவான்
அற்ப புத்திக்காரன் பெரியோரை அறிவானா ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

105. ***'ஆறு ருசிலு வேற சாரம்பு ஒக்கடே'***

அறுசுவை பலப்பல சாரம் ஒன்றே
உண்மையை அறிந்திட வழிபல ஆயினும்
உண்மைப் பொருள் ஒன்று முனிவர் பலபேர்
மூலப் பொருள் ஒன்று அறிக வேமா

106. ***'கள்ளுகு இச்சினட்லு சல்லுகு இப்பலேரு'***

கள் குடிக்கு உதவுவார் நீர்மோருக்கு உதவார்
கள்வர்க்கு உதவுவார் நல்லவர்க்கு உதவார்
தாசிக்கு உதவுவார் தானத்திற்கு உதவார்
விசுவதா பிராம கேளாய் வேமா.

107. ***'மாட மருகு சிக்கு மனுச லோகம் பெல்ல'***

மானிட உலகில் பேச்சளவே வெட்கம்
ஆடை குறைப்பதில் வெட்கம் இல்லையாம்
ஆபாச தாம்பத்யம் சொன்னால் வெட்கம்
இதைவிட வெட்கம் வேறென்ன வேமா.

108. ***'பதி ஒப்பின சதி ஒப்புனு'***

கணவன் மனைவி ஒருவருக்கு ஒருவர்
குறிப்பறிந்து நடத்திடும் இல்லற வாழ்வில்
மோட்ச உலகம் நிலையாய் நிற்கும்
அங்கே பரமன் வாழ்வான் வேமா.

109. *'முரிகி கொம்ப லோன'*

மாசுள்ள வீட்டில் ஜீவனைப் பூட்டி
காம பாசங்களால் கட்டி வைப்பார்கள்
கட்டுண்ட ஜீவன் கடைத்தேறும் வழிஎது?
விசுவதா பிராம கேளாய் வேமா.

110. *'குலுகு சனுல ஜூபி கொப்புன ஜரிகிஞ்சி'*

குலுங்கும் மார்பினால் இளைஞரைக் கவர்ந்து
கைக்காசு முழுவதும் கரைத்து விடுவார்
பை காலி ஆனதும் புதுஉறவு தேடுவார்
வேசியர் இயல்பிது கேளாய் வேமா.

111. *'சாந்தமுன சர்வ கார்யமு'*

சாந்த குணத்தால் சகல காரியமும்
மகிழ்வுடன் முடியும்; உண்மையால் வெற்றியின்
தொடர்பும் கிடைக்கும்; தர்மன் சாந்த
குணத்தால் பெற்றது வெற்றி வேமா.

112. *'காலமுல மகிம தெலியக'*

காலத்தின் அருமையை உலகோர் அறியாமல்
காலம் முழுவதும் வாழ்வது சதமென
வீணாய் நினைத்து கருவம் கொள்வார்
உலகுக்கு இதனை உணர்த்துவாய் வேமா.

113. *'பாபமனக வேற பரதேசமுன லேது'*

பாவம் என்பது வேற்றுலகில் இல்லை
தான் செய்யும் செயலிலே மறைந்தி ருக்கும்
கருமத்தில் உழல்பவன் ஞானக்கண் பெற்று
கதைகேட்ட துண்டோ கூறு வேமா.

114. ***'தோயுனிச்ச வாடு தோடனே நெரசாக'***

நடுங்கும் ஓர் துறவிக்கு மேலாடை தருபவன்
மேலோன்; பறிப்பவன் பரம துரோகியாம்
பிழைக்கும் வழிதனைக் கூறுவோன் மேலோன்;
கெடுப்பன் கீழோன் அறிவாய் வேமா.

115. ***'தன்னு கன்னி யட்டி தல்லி வண்டிதி அம்மி'***

பெற்றதாய் போல் வேறு பெண்களை நினைத்திடு
பெற்றதாயைப் புதல்வர்கள் அறிந்தால்
அன்னியப் பெண்களை விரும்பு வார்களா?
விசுவதா பிராம கேளாய் வேமா.

116. ***'ஆலு பிட்ட தனமுலாதலி தன்றிசி'***

மனைவி மக்கள் பணம் பொருள் எல்லாம்
சதம் என நினைத்துக் கலங்குவார் மக்கள்
பிரம்மத்தைக் காட்டிலும் துணை யாருமில்லை
விசுவதா பிராம கேளாய் வேமா.

117. ***'தெலகு ஒக்கசாரி நெத்துரு காணாலு'***

மாதம் ஒருமுறை உதிரப் போக்கு
வெப்பம் கண்டால் வெள்ளைப் போக்கு
என்றும் இருக்கும் சிறுநீர்ப் போக்கு
ஆண்களுக்கு இதிலே விருப்பமேன் வேமா.

118. ***'அன்னபன காளவரு பதிதெலியக ஜூட'***

அண்ணன் என்பவன் யார்? ஆராய்ந்து பார்நீ
உனக்கும் முன்பே பிறந்தவன் அண்ணன்
அவனைப் போன்றவர் அரனும்* குருவும்**
விண்ணிலும் மண்ணிலும் ஒளிர்வார் வேமா.

* அரன் = சிவன் ** குரு = அறியாமையைப் போக்குபவர்

109. ***'முரிகி கொம்ப லோன'***

மாசுள்ள வீட்டில் ஜீவனைப் பூட்டி
காம பாசங்களால் கட்டி வைப்பார்கள்
கட்டுண்ட ஜீவன் கடைத்தேறும் வழிஎது ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

110. ***'குலுகு சனுல ஜூபி கொப்புன ஜரிகிஞ்சி'***

குலுங்கும் மார்பினால் இளைஞரைக் கவர்ந்து
கைக்காசு முழுவதும் கரைத்து விடுவார்
பை காலி ஆனதும் புதுஉறவு தேடுவார்
வேசியர் இயல்பிது கேளாய் வேமா.

111. ***'சாந்தமுன சர்வ கார்யமு'***

சாந்த குணத்தால் சகல காரியமும்
மகிழ்வுடன் முடியும்; உண்மையால் வெற்றியின்
தொடர்பும் கிடைக்கும்; தர்மன் சாந்த
குணத்தால் பெற்றது வெற்றி வேமா.

112. ***'காலமுல மகிம தெலியக'***

காலத்தின் அருமையை உலகோர் அறியாமல்
காலம் முழுவதும் வாழ்வது சதமென
வீணாய் நினைத்து கருவம் கொள்வார்
உலகுக்கு இதனை உணர்த்துவாய் வேமா.

113. ***'பாபமனக வேற பரதேசமுன லேது'***

பாவம் என்பது வேற்றுலகில் இல்லை
தான் செய்யும் செயலிலே மறைந்தி ருக்கும்
கருமத்தில் உழல்பவன் ஞானக்கண் பெற்று
கதைகேட்ட துண்டோ கூறு வேமா.

114. ***'தோயுனிச்ச வாடு தோடனே தெரசாக'***

நடுங்கும் ஓர் துறவிக்கு மேலாடை தருபவன்
மேலோன் ; பறிப்பவன் பரம துரோகியாம்
பிழைக்கும் வழிதனைக் கூறுவோன் மேலோன்;
கெடுப்பன் கீழோன் அறிவாய் வேமா.

115. ***'தன்னு கன்னி யட்டி தல்லி வண்டிதி அம்மி'***

பெற்றதாய் போல் வேறு பெண்களை நினைத்திடு
பெற்றதாயைப் புதல்வர்கள் அறிந்தால்
அன்னியப் பெண்களை விரும்பு வார்களா ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

116. ***'ஆலு பிட்ட தனமுலாதலி தன்றிசி'***

மனைவி மக்கள் பணம் பொருள் எல்லாம்
சதம் என நினைத்துக் கலங்குவார் மக்கள்
பிரம்மத்தைக் காட்டிலும் துணை யாருமில்லை
விசுவதா பிராம கேளாய் வேமா.

117. ***'நெலகு ஒக்கசாரி நெத்துரு காணானு'***

மாதம் ஒருமுறை உதிரப் போக்கு
வெப்பம் கண்டால் வெள்ளைப் போக்கு
என்றும் இருக்கும் சிறுநீர்ப் போக்கு
ஆண்களுக்கு இதிலே விருப்பமேன் வேமா.

118. ***'அன்னயன காளவரு யதிதெலியக ஜூட'***

அண்ணன் என்பவன் யார் ? ஆராய்ந்து பார்நீ
உனக்கும் முன்பே பிறந்தவன் அண்ணன்
அவனைப் போன்றவர் அரனும்* குருவும்**
விண்ணிலும் மண்ணிலும் ஒளிர்வார் வேமா.

---

* அரன் = சிவன் ** குரு = அறியாமையைப் போக்குபவர்

119. ***'பதுகுராடு மாட பாடியைதர செல்லு'***

பத்துபேர் பேச்சே உண்மை ஆகிடும்
ஒருவனின் பேச்சு செல்லாக் காசு
அகம்புறம் வாழும் பரமனின் பேச்சைக்
கேட்க மாட்டாரோ சொல்லிவிடு வேமா.

120. ***'ஒகப் பிரம்மாண்டமு தலசின'***

பிரம்ம அண்டம் ஒன்றினை எண்ணிப்
புகழ்ந்திட முடியாத போது இச்சிறு
உலகினை நினைக்கச் சிரிப்பு வருகுது
அண்டங்களின் கூத்து ஏன் கூறு? வேமா.

121. ***'நீள்ள லோனி முசலி நிகுடி ஏனுக தீக'***

நீர்வாழ் முதலை யானையும் பிடிக்கும்
தரைக்கு வந்தால் நாய் அதை அடிக்கும்
இடபலம் அல்லது சுயபலம் அல்லவே
விசுவதா பிராம கேளாய் வேமா.

122. ***'ஆத்மலோனி ஜ்யோதி அமருட லிங்கம்பு'***

ஆத்ம ஜோதியில் அமரும் சிவலிங்கம்
திறவுகோல் இல்லாமல் அறிய முடியாது
குருவின் துணையின்றிக் காண முடியாதே
விசுவதா பிராம கேளாய் வேமா.

123. ***'ஊர்விஜனுலு பரம யோகீஸ்வருனி சூசி'***

உலக மக்கள் யோகியைக் கண்டு
பெருமை அறியாது கண்டபடி ஏசுவார்
அமிழ்தத்தின் சுவையினை கைதான் அறியுமோ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

124. '**ஒகரி நோரு கொட்டி ஒகரு பட்சிந்துரு**'

ஒருவனை ஏய்த்து ஒருவன் வாழ்வான்
அவனை ஏய்க்க ஒருவன் வருவான்
மீனின் குஞ்சுகளைப் பெரிய மீன் தின்னும்
நரமீனைக் கொல்வான் பரமன் வேமா.

125. '**கோதி நொகர தெஞ்சி கொத்த பட்டமு கட்டி**'

குரங்கைக் கொண்டுவந்து பட்டம் சூட்டி
மலைவாழ் குரங்குகள் ஏவல்செய் வதுபோல்
நீதி அற்றவர்க்கு தரித்திரர் நித்தமும்
பணிவிடை செய்வார் கேளாய் வேமா

126. '**ரதமுனகு ஐது சீலலு**'

தேரின் ஆணிகள் ஐந்து ஆகிடும்
தேரோட்டி அதட்டினால் தேரும் ஓடும்
அதுபோல் உடலின் ஆணிகள் ஐந்து*
தலைவன் யாரென அறிவாய் வேமா.

127. '**பெருமு மொயகாலு மேகு நகு பலிமி**'

மின்னல் வெட்டினால் மேகம் பலம்பெறும்
மேகம் பலம்பெற்றால் மழையும் பொழிந்திடும்
மின்னல் வெட்டாமல் மழைத்துளி விழுமா ?
விசுவதா பிராம வினர வேமா.

---

* இரதம் = உடம்பு
ஆணிகள் = ஐந்து மூலப் பொருள்களாகிய
ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண்
அதிபதி = பரம்பொருள்

128. ***'தனுகு மெருமு சூசி தரலோன ஜனுலெல்ல'***

பளிச்சிடும் மின்னலைப் பார்த்து விட்டு
'மழைவரும்' 'வராது' 'இனியேது மழை' என்று
பலவிதமாகப் பேசுவார் மக்கள்
விசுவதா பிராம கேளாய் வேமா.

129. ***'புலியு மெட்டி தன்ன பூலோக ம்ருக ராஜு'***

புலி எத்தனைப் பெரியது விலங்குகளின் அரசன்
கலியின்* உருவம் கண்ணுக்குத் தெரியாது
புலி, கலி இரண்டிலும் பசியே பெரியது
விசுவதா பிராம கேளாய் வேமா.

130. ***'கடுபு லோன நுன்ன கணமைன பிண்டம்பு'***

வயிற்றில் வாழ்ந்த கணமான பிண்டம்
பேறு காலத் துன்பம் எல்லாம் நீங்கி
நான்இனி உலகில் ஞானத் துடனே
நற்புத்தி தேடுவேன் என்றிடும் வேமா.

131. ***'பிண்டம்பை உதரம்புன'***

வயிற்றினில் பிண்டமாய் வளரும் நாட்களில்
சிலநாள் இருந்து மடிவதும் உண்டு
பூரணப் பிண்டமாய் உலகினில் பிறப்பினும்
உயிர்வாழ முயற்சி செய்திடும் வேமா.

132. ***'கள்ளலு பலிகெடு நருலகு'***

பொய்யே பேசிடும் மனிதர் களுக்கு
பிரும்ம வித்தையைக்** கற்பிப்பது எப்படி?
மோருடன் பாலைக் கலப்பதால் பாலும்
மோரின் குணத்தைப் பெறல்போல் வேமா.

---

* கலி = துன்பம்

** பிரம்ம வித்தை = அனைத்தும் சமம் என்று நினைக்கும் குணம்

133. ***'சுகமு வெல்ல பரியு சூடங்க துக்கமு'***

சுகத்தைத் தேடினால் துக்கமே பெருகும்
புண்ணிய பாவங்கள் பூர்வ கருமம்
பேராசைத் திருடன் மாட்டிக் கொண்டு
தண்டனை பெறுவது போல்தான் வேமா

134. ***'பிராம்ஹறனுலகு பெட்டே பலமுகத்த நந்துரு'***

பிராம்மணருக்கு உணவிட்டால் புண்ணியம் என்பார்
நாய்க்கு உணவிட்டால் வரும்பாவம் என்ன !
அங்கும் இங்கும் இருப்பன் சிவனே
விசுவதா பிராம கேளாய் வேமா

135. ***'பலுகுமன்ன நாதோ பலுகுக உன்னாவு'***

பேசும் ஐயா என்னிடம் என்றால் பேசாமல் இருக்கிறாய்!
பேசும் ஐயா நீ மிகவும் பிரபல மாக
பேசும் ஐயா நீ நான் நன்றாய் அறியும்படி
விசுவதா பிராம கேளாய் வேமா.

136 ***'மனசு சிவனிபித மதி தானி தானியா'***

மனதினை சிவன்மேல் வைத்திடு ; பிறகு
கோபமாம் நாயை கோள் சொல்லும் பன்றியை*
சிவபெரு மானின் சேவைக்கு அமர்த்தி
கோபத்தை அடக்கி குணம்தெளி வேமா.

* நாய் = கோபம் ; பன்றி = கோள் சொல்லும் குணம்

137. ***'சத்யமுகல அரிச்சந்த்ருடு'***

உண்மையைக் காத்த அரிச்சந்ர மன்னன்
நித்திய உலகில் நிலைபெற்று உள்ளான்.
மனதினுள் நித்யனாய் உண்மையே பேசினால்
வரும்பலன் எதுவெனப் பாராய் வேமா.

138. ***'தான தர்மமுலனு தகரேபு நேடனி'***

தான தருமங்களை நாளை இன்றென
காலம் கடத்துவோன் உலோபி ஆவான்
தான்என்ன ஆவான் வாழ்வென்ன ஆகும்
மாயை அறிய மாட்டான் வேமா.

139. ***'ஆகு காணவச்சு ஹரி ஹா லகைன'***

இலையைக் காணலாம் அரி, அரண், பிரம்மாவும்
கிளையைக் காண்பது யாருக்கும் இயலாது
கிளையைக் காணாது ஆடுவார் ஆட்டங்கள்
மக்களின் குணமும் இதுவே வேமா.

140. ***'தனகு லேமினாடு தெய்வமு தூருனு'***

ஏழையாய்ப் போனால் தெய்வத்தை நினைப்பான்
செல்வம் சேர்ந்தால் தெய்வத்தை மறப்பான்
தனக்கும் தெய்வத்திற்கும் இந்நிலை ஏனோ?
விசுவதா பிராம கேளாய் வேமா.

141. ***'ஜீவி போகுமுனுபே ஜீவ வஸ்துவு யிச்சி'***

உயிர்போகும் முன்பே உயிர்ப்பொருள் தந்து
உயிர்தனை நிறுத்து நிரந்தர மாக
உயிர்போன பின்பு உயிர்ப்பொருள் எதற்கு?
விசுவதா பிராம கேளாய் வேமா.

142. *'ஆத்ம லோனி சொம்மு அஞ்சனகா ஜுச்சி'*

ஆன்மாவின் உள் அழகை மைதடவிப் பார்த்து
அதைத் தொடர்ந்து திரிபவன் பரமயோகி
கூட்டிற்குள் இருந்தாலும் பொழுதறிந்து கூவும்
சேவலைப் போல்தான் அதுவும் வேமா.

143. *'சுக்கில மரய ஆட அவாவர்ணமு தெலுவு'*

சுக்கிலம் சோணிதம் இரண்டைக் கூறுவார்
சுக்கிலம் வெந்நிறம் சோணிதம் சிகப்பு
வெண்மையில் சிகப்பினில் பளிச்சிடும் ஆன்மா
அதுவே வீட்டுலகின் வழிகாட்டும் வேமா.

144. *'சகல ஜீவமுலந்து சமமுகா னுண்டெடி'*

சகல உயிர்களிலும் சமமென இருக்கும்
பரம்பொருள் சூட்சுமம் அறிந்தவன் யோகி
பரம்பொருள் நீயே மற்றவர் அல்லர்
விசுவதா பிராம கேளாய் வேமா.

145. *'ப்ராணி ஜேரிநாடு பரக தேஹமுனரு'*

உயிர் சேர்ந் ததுமுதல் செயல்பட்ட உடம்பு
ஆடி அசைந்து இயங்கிடும் நன்றாய்
உயிர்போன பின்னால் கவைக்கும் உதவாது
என்று பேசுவார் உலகோர் வேமா.

146. *'கனக பர்வதமுன காபுரம் புண்டியு'*

பொன்மலை மீதுகுடி கொண்டு வாழும்
இந்திரனுக்கும் ஆசை விடாது
கவச குண்டலம் கர்ணனிடமே
யாசகம் கேட்டவன் இந்திரன் வேமா.

147. ***'கடகி னட்டி ஆச கடதேர நிவ்வது'***

அளவிலா ஆசை கடைத்தேற விடாது
துன்பக் கடலில் மூழ்க வைத்திடும்
பூமியில் பக்தி செய்ய விடாது
விசுவதா பிராம கேளாய் வேமா.

148. ***'நீள்ள லோனி சேப நெரிமாம்ச ஆசகு'***

நீர்வாழ் மீனும் புழுவை விரும்பி
தூண்டிலின் முள்ளில் சிக்கி இறக்கும்
ஆசையின் வலையில் விழுந்தால் மோசமே
விசுவதா பிராம கேளாய் வேமா.

149. ***'நூறு ஜெப்பவச்சனு ஒக்கடி வ்ராயக ராது'***

நூறு சொல்லலாம் ஒன்றை எழுத முடியாது
எழுத்தைக் காட்டிலும் சாட்சி பலமா ?
எழுத்தைச் சிறப்பாய் கற்கா விட்டால்
சாட்சிக்கும் பலமாம் நண்பனே வேமா

150. ***'கூளகூள மெச்சு குணவந்து செடனாடு'***

அற்பனை அற்பன்தான் மெச்சுவான் குணவானை
இகழ்வான் ; அற்பனை வேறுயார் மெச்சுவார் ?
மரத்தூலம் அறியுமோ ஞானம் தன்னை
விசுவதா பிராம கேளாய் வேமா..

151. ***'ஆத்ம லோனி ஜ்யோதி அமருட லிங்கம்பு'***

ஆத்மாவின் உள்ளிருக்கும் ஜோதியாம் லிங்கம்
தேடினால் அல்லது தென்படாது.
அந்தகர் அறிவாரா வைரத்தின் ஒளிதன்னை
விசுவதா பிராம கேளாய் வேமா.

152. **'கல்மஷம்ப போக கனிபிஞ்ச தெந்துனு'**

அழுக்கினைப்* போக்காமல் காண்பிக்க முடியாது
யாருக்கும் உருவம்** விளங்கி விடாது
தாமச குணம்*** போனால் ஞானம் கிடைக்கும்
விசுவதா பிராம கேளாய் வேமா

153. **'அதிகுடைன வானிகி அதிகாரம் இச்சினா'**

உத்தமன் தனக்கு அதிகாரம் தந்தால்
ஏழை எளிய மக்களைக் காப்பான்
கரும்பைத் தின்றவன் கசப்பை விரும்புமா ?
அதுபோல் தான்அவன் குணமும் வேமா

154. **'ஹீன நருலதோட இந்துல தோடனு'**

ஈனர் தம்முடன் மங்கையர் தம்முடன்
இளைஞ ருடனும் செல்வந்த ருடனும்
உத்தமர் தம்முடன் ஞானியர் தம்முடன்
சமயம் அறிந்து பேசிடு வேமா.

155. **'ஆபு கொஞ்சமைதே சுக்கலு லுண்டகா'**

பார்வை குறைந்தால் விண்மீன்கள் தெரியாது
தெளிந்த பார்வைக்கு விண்மீன்கள் தெரியும்
மனக்கண்ணின் பார்வைக்கு ஞான விளக்கொளி
தெளிவாய் தெரிந்திடும் கேளாய் வேமா

---

* அழுக்கு = மனதிலிருக்கும் தீய குணங்கள்

** உருவம் = பரம்பொருள்

*** தாமச குணம் போவது = கோபத்தை அடக்கி சாந்தம் தலை தூக்குவது

156. ***'தல்லி ஊர்வசி லெஞ்ச, தன ஆளு மாதிக'***

*வைப்பாட்டி ஊர்வசி தாயானாள்; மனைவியோ*
*சக்கிலிப் பெண் ; மகனோ பிராம்மணன்*
*எவ்வாறு அந்தத் தகுதியைத் தந்தது ?*
*குலமா தவமா ? கூறிடு வேமா.**

157. ***'பிடுகுனு யரசேத பிக பட்டியந்துலோ'***

*பிடியைத் தன்கையில் இறுக்கமாய்ப் பிடித்து*
*அதனது அழுக்கை அறவே அகற்றி*
*மகரத்தைக் கையிலேந்தி கலியுகத்தைக் காத்திடும்*
*பிரம்மத்தை அறிந்து நீ தெளிவாய் வேமா.*

158. ***' சமுத்ர முனகு ஜுட சரிஎதி யுனு லேது'***

*ஆழமும் அகலமும் அளவும் நிறைந்த*
*கடலுக்குச் சமமாய் எதுஉண்டு உலகில் ?*
*உப்புக் கரிக்கும் அதன் நீர் தாகம் தீர்க்குமா ?*
*விசுவதா பிராம கேளாய் வேமா.*

159. ***'முஷ்டி வேப செட்டு மொதலுகா ப்ரஜலகு'***

*கண்டங் கத்தரி வேம்பும் எட்டியும்*
*கசக்கின்ற போதிலும் மருந்துக்கு உதவுமாம்*
*இரக்க குணமில்லா நீசர்கள் உலகில்*
*ஒன்றுக்கும் உதவார் கேளாய் வேமா.*

---

****ஊர்வசி வசிட்டரின் வைப்பாட்டி; வசிட்டரின் மனைவி அட்சமாலிகை என்னும் கீழ்ச் சாதி என்று கருதப்பட்ட அருந்ததி இருப்பினும் வசிட்டர் சப்தரி ரிஷிகளில் (ஏழு முனிவர்களில்) ஒருவராகக் கருதப்படுகிறார். வானில் உள்ள ஏழு விண்மீன்கள் அடங்கிய கூட்டத்தில் வசிட்டர் பெயரில் அமைந்த மீனுக்குப் பக்கத்தில் அருந்ததி மீனும் உள்ளது ஆகவே ஒருவன் பிராம்மணன் ஆவது சாதியால் மட்டும் அல்ல அவனது செயல்களாலே தான்.***

160. *'ஸ்தாவரமுல பட்சிந்துரு'*

காய்களை உணவாய் உண்பார் மனிதர்
பறவைகள் முதலிய யாவையும் தின்பார்
நாவின் சுவைக்கு அடிமை யாகித்
தம்மைத் தாமே தின்பார் வேமா.

161. *'குர்ரமுனகு தகின குருதைன ரௌதுன்ன'*

குதிரைக்கு ஏற்ற சாரதி வாய்த்தால்
குதிரையும் அடங்கி ஒடுங்கி இருக்கும்
குதிரையைப் போன்ற தம் குணமேன் அறியார்
தெரிய வில்லையே? நண்பனே வேமா

162. *'இட்டி லிங்கமந்து ஈரேடு ஜகமுலு'*

லிங்கத்தில் இருந்து பதினான்கு உலகில்
பிறந்தும் வாழ்ந்தும் பின் பூமியை விட்டுக்
கால தேவனின் காணிக்கை ஆகுவார்
பாவம் மக்கள் அமர வேமா.

163. *'நீள்ள மீத வ்ராத நிறுவக உன்னட்லு'*

நீர் மேல் எழுந்து நிற்காது அதுபோல்
உலகமும் பொய்யே மோட்சமும் இல்லை
இருப்பினும் உலகம் நிலையெனப் பேசுவார்
உலக மக்களின் ஆசைஇது வேமா

164. *'ஆச பாப ஜாதி அன்னிட்டிகி அன்டெனு'*

பாவங்கள் அனைத்திலும் ஆசையே மோசமாம்
ஆசையால் அறிஞர்கள் மோசம் போகார்
ஆசையின் கெடுதியை விட்டவர் களுக்கே
பரிசுத்த ஆன்மா கைகூடும் வேமா.

165. *'பகமு மிதனாச பரக புருஷுன குண்டு'*

ஆண்களுக்கு எப்போதும் பெண்கள்மேல் ஆசை
பெண்களுக்கு எப்போதும் ஆண்கள்மேல் ஆசை
சித்தருக்கு எப்போதும் சிவன்மேல் ஆசை
விசுவதா பிராம கேளாய் வேமா.

166. *'லஜ்ஜ லஜ்ஜ அனுக லலனல மீதிகி'*

வெட்கம் வெட்கம் என்று பெண்மோகம் கொண்டு
வெட்கம் விட்டுத் திரிபவன் வேசி மகனாம்
வெட்கத்தின் உள்பொருள் தெரிந்து கொண்டால்
பெண்வெறி பிடித்துத் திரிவாரோ வேமா.

167. *'கள்ளு நீள்ளு த்ராகி கடு பெத்த வாரிதோ'*

கள்ளைக் குடித்துச் சேலையை அவிழ்த்து
பெரிய மனிதரோடு திரிபவள் திகம்பரி*
வேலை முடிந்ததும் சேலயைக் கட்டுவாள்
விசுவதா பிராம கேளாய் வேமா.

168. *' ஏதட்டி தனபலம் எஞ்சகோ நோக '*

தன்பலம் எதிரியின் பலம் அறியாமல்
கருவமும் கோபமும் கொண்டு தாக்கினால்
அடிகளைத் தாங்கிய எதிரியின் பொறுமையே
வாள்போல் நம்மைத் தாக்கிடும் வேமா.

169. *'பூர்ணமைன தனது புஜபலமு ஜூச்சி '*

உருண்டு திரண்ட தோள் பலத்தை எண்ணி
பகையாளி யுடன்போர் செய்திட வேண்டாம்
வீசிய பந்து நம்மை நோக்கி வருமே
விசுவதா பிராம கேளாய் வேமா.

---

* *திகம்பரி = ஆடையில்லாமல் அலையும் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு பெண்; ஆண்பால் திகம்பரன்*

170. **'ஒக்க பனக தோட னுன்னதி சகலமு'**

அசைவிலா மனத்தில் உள்ளது அனைத்தும்
அதையு ணராமல் எதையோ தேடி
உழல்கிறார் மாந்தர்; இந்த உண்மையை
ஒருவன் அறிந்தாலும் போதுமே வேமா.

171. **'இட்டியவ் வனமுன ஈஸ்வரத் தியானம்பு'**

இளமையில் செய்திடு ஈஸ்வரத் தியானம்
கருணை யுடனே செய்திடல் வேண்டும்
செய்யாமல் விட்டால் சுகமேது உலகில்
விசுவதா பிராம கேளாய் வேமா

172. **'பகலுடுக கோபமுடுகுனு'**

பகைதீர்ந்து விட்டால் கோபமும் தீர்ந்திடும்
கோபம் தீர்ந்தால் கோரிக்கை தீர்ந்திடும்
கோரிக்கை தீர்ந்தால் பேதங்கள் தீர்ந்திடும்
முக்குணம்* தீர்ந்தால் முக்தியே வேமா.

173. **'மானினீ மனோஜ மந்திரா தந்துடேள'**

மூவாசையில்** சிக்கி மூழ்கி இருப்பவன்
நித்திய சுகம்தனை விரும்பு வானா?
மாமிசம் தின்பதை தெருநாய் மறக்குமா?
விசுவதா பிராம கேளாய் வேமா.

174. **'எட்டி வானிகி ஜன புட்டுனு மோகம்பு'**

எத்தன்மை யோனுக்கும் பிறந்திடும் காமம்
பிறந்திடும் காமத்தைக் குழியில் புதைத்து
மனத்தைக் கட்டினால் பிரம்மத்தைக் காணலாம்
விசுவதா பிராம கேளாய் வேமா.

---

* முக்குணம் = இராஜச குணம், தாமச குணம், சாத்துவீக குணம்
** மூவாசை = மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை

175. ***‘ பிண்ட அண்டமந்து பெனரு கன்னட்டி’***

பிண்டமும் அண்டமும் பிணைந்து நிற்க
தந்தையின் விந்துவும் தாயின் சோணிதமும்
இரண்டறக் கலந்து பிண்டமாய் ஆகிட
பெண்கரு உற்றாள் என்பார் வேமா.

176. ***‘ புடகனு பெஜ்ஜயு புச்சுக’***

வறட்டியில் மூட்டிய நெருப்பின்மேல் சாம்பல்
சாம்பலை ஊதினால் இருப்பது நெருப்பு
பெண்களை ஒருவன் தொடர்ந்து சென்றால்
விரகமாம் நெருப்பும் தோன்றிடும் வேமா.

177. ***‘ஸ்திரீல முகமு ஜுச்சி சித்தம்பு நிலகட’***

பெண்களின் முகம்கண்டு முகம்தடு மாறி
மனிதர் மனம்தடு மாறிட வேண்டாம்
ஆற்றங் கரைமரம் எதுவரை நிற்கும்?
விசுவதா பிராம கேளாய் வேமா.

178. ***‘ ஒச்சேதி போய்யேதி யனுமரி ’***

வருவதும் போவதும் தவிர வேறு
எதுவும் அறியார் இயல்பிது என்பார்
காமத் தீயில் விழுந்திடும் பெண்போல்
நரகத் தீயில் விழுவார் வேமா.

179. ***‘ ஜனன மரண வேள ஸ்வதந்த்ர ஹீனுரு’***

பிறப்பையும் இறப்பையும் அறிய முடியாதவன்
முதலுக்கும் முடிவுக்கும் தலைவன் அல்லன்
கிடைக்கா லத்தில் தலைவன் என்பது
சிரிப்பை மனதில் ஊட்டுது வேமா.

180. ***' பதி அது வித்தரு கூட'***

கணவனும் குழந்தையும் மங்கையின் இருபுறம்
படுக்கையில் பெண்ணின் மலர்போல் மார்பை
கணவன் தீண்டினால் காமம் பிறக்கும்
குழந்தை தீண்டினால் பால்ஊறும் வேமா

181. ***' தானம் பிச்சின சேதுலு '***

தானம் தந்த கைகளை யுடையோர்க்கு
தானமே பிரம்மத்தின் திருவடிகள் என்ற
ஞான மார்க்கம் ஏன்தெரிவ தில்லை?
உலக மக்கள் அறியார் வேமா.

182. ***' சிவ மந்த்ர மூல கெல்ல விவரிம்ப ஹரி குருவு'***

'சிவ' எனும் மந்திரகுரு ஹரி ஆவான்
'ஹரி' எனும் மந்திரகுரு சிவன் ஆவான்
குருவினை அறியான் உண்மையை அறியான்
விசுவதா பிராம கேளாய் வேமா.

183. ***' கண்டி மண்டிசாத காமுனி கெல்சியு'***

நெற்றிக்கண் நெருப்பினால் காமனை எரித்த
சிவன்தன் காமம் தணிந்தி டாமல்
முனிவர்தம் பெண்களைக் கூடினார் என்றால்
காமத்தை வென்றவர் யார்இங்கு வேமா.

184. ***' புடமினிகல நடஜீவுலு '***

உலகினில் பிறந்த உயிர்கள் அனைத்தும்
வடவைத் தீ என்னும் தீவுக்குப் போகும்
ஜடத்தினில்* உயிரும் கூடின பொழுதே
பிரளயம்** என்பது உண்டு வேமா.

---

* ஜடம் = அசையாப் பொருள்
** பிரளயம் = அழிவு அல்லது முடிவு

185. ***' மொதட போயு நீரு மொதலி தகை எக்கி '***

முதலில் பாய்ச்சும் நீர் வேரில் இறங்கி
மெல்ல வளர்ந்து மரமும்நிலை பெறும்
பிறவி ஒன்றில் செய்த புண்ணியம்
பிறவிகள் தோறும் நிலைபெறும் வேமா.

186. ***' மல மூத்ர இத்யாதி மாம்ச யுத்தம் பைன '***

சிறுநீரும் மலமும் இரத்தமும் இறைச்சியும்
சேர்ந்த இவ் வுடல்தான் ஒரு குடம் நீரினால்
தூய்மை ஆகுமா ? புறம்தூய்மை ஆகிடும்
உள்அழுக்குப் போகுமா ? கூறுவாய் வேமா.

187. ***' மானுலோன அக்கி மரியுண்டகா வச்சு '***

மரத்தின் உள்ளே தீ மறைந்து இருக்கலாம்
நெருப்பினில் மரமும் இருக்க முடியுமா ?
மரத்தினுள் நெருப்பைப் போன்றது இல்லறம்
விசுவதா பிராம கேளாய் வேமா.

188. ***' தருணி அங்க மெல்ல புருஷுண்டு எருகுனு'***

பெண்ணின் அங்கங்கள் ஆண்மகன் அறிவான்
ஆடவன் அங்கங்கள் பெண்ணும் அறிவாள்
இருப்பினும் இருவர்க்கு ஆடைகள் இல்லையேல்
வெட்கமாய் இருக்கும் அறிவாய் வேமா

189. ***' சன்னலு பரசதி கொப்பின'***

இதர மாதர்கள் மார்பகம் அழகென
பாவப் பார்வை அதில் விழா முன்பே
இளமையில் தாய்ப்பால் குடித்த மார்பகம்
போல்தான் அவைஎன நினைத்திடு வேமா.

190. ' **அனுகூல்யம் அய்ன அங்கன கலியின** '

அனுசரனை உள்ள இருவர் இணைந்தால்
சதிபதி இருவர்க்கும் மகிழ்ச்சி உண்டு
எதிரும் புதிருமாய் இருவரும் இருந்தால்
இருவர்க்கும் என்றும் கவலையே வேமா

191. ' **ஜன்மமுலே என்னி ஜம்மம்பு லெத்தினா** '

பிறவிகள் எத்தனை எடுத்த போதிலும்
கருமமும் தருமமும் கணக்கிட முடியுமா ?
கரும தருமங்களால் கடைத்தேற மாட்டார்
விசுவதா பிராம கேளாய் வேமா.

192. ' **தொம்மிதி கந்தல தித்திகி** '

ஒன்பது துவாரத் தோல்பை இதற்கு
ஆடை அணிகலன் குலம் என்பது எதற்கு ?
தேகம் நிலைஎன நம்பிட வேண்டாம்
பிரம்மம்* நீஎனத் தெரிந்துகொள் வேமா.

193. ' **தாமு உன்ன ஊரு கூாமம்பு வாட்டில்ல** '

பிறந்த மண்ணில் பஞ்சம் வாட்டினால்
சொந்த ஊர்விட்டு அயல்ஊர் செல்வார்
ஏரியில் நீர்இன்றிக் காய்ந்து போனால்
கொக்குகள் அதிலே வாழாது வேமா

194. ' **தனது ஆத்ம நுன்ன தெய்வம்பு காணக** '

ஆன்மாவின் உள்உள்ள தெய்வத்தைக் காணாமல்
புனிதநீர் நிலைகளைத் தேடிச் செல்வது
சந்தனக் கட்டையைக் கழுதை சுமந்திடும்
செயல்போல் ஆகிடும் கேளாய் வேமா.

* பிரம்மம் = முழு முதல் பொருள்

185. ***' மொதட போயு நீரு மொதலி தகை எக்கி '***

முதலில் பாய்ச்சும் நீர் வேரில் இறங்கி
மெல்ல வளர்ந்து மரமும்நிலை பெறும்
பிறவி ஒன்றில் செய்த புண்ணியம்
பிறவிகள் தோறும் நிலைபெறும் வேமா.

186. ***' மல மூத்ர இத்யாதி மாம்ச யுத்தம் பைன '***

சிறுநீரும் மலமும் இரத்தமும் இறைச்சியும்
சேர்ந்த இவ் வுடல்தான் ஒரு குடம் நீரினால்
தூய்மை ஆகுமா ? புறம்தூய்மை ஆகிடும்
உள்அழுக்குப் போகுமா ? கூறுவாய் வேமா.

187. ***' மானுலோன அக்கி மரியுண்டகா வச்க '***

மரத்தின் உள்ளே தீ மறைந்து இருக்கலாம்
நெருப்பினில் மரமும் இருக்க முடியுமா ?
மரத்தினுள் நெருப்பைப் போன்றது இல்லறம்
விசுவதா பிராம கேளாய் வேமா.

188. ***' தருணி அங்க மெல்ல புருஷுண்டு எருகுனு'***

பெண்ணின் அங்கங்கள் ஆண்மகன் அறிவான்
ஆடவன் அங்கங்கள் பெண்ணும் அறிவாள்
இருப்பினும் இருவர்க்கு ஆடைகள் இல்லையேல்
வெட்கமாய் இருக்கும் அறிவாய் வேமா

189. ***' சன்னலு பரசதி கொப்பின'***

இதர மாதர்கள் மார்பகம் அழகென
பாவப் பார்வை அதில் விழா முன்பே
இளமையில் தாய்ப்பால் குடித்த மார்பகம்
போல்தான் அவைஎன நினைத்திடு வேமா.

190. '**அனுகூல்யம் அய்ன அங்கன கலிபின**'

அனுசரணை உள்ள இருவர் இணைந்தால்
சதிபதி இருவர்க்கும் மகிழ்ச்சி உண்டு
எதிரும் புதிருமாய் இருவரும் இருந்தால்
இருவர்க்கும் என்றும் கவலையே வேமா.

191. '**ஜன்மமுலே என்னி ஜம்மம்பு லெத்தினா**'

பிறவிகள் எத்தனை எடுத்த போதிலும்
கருமமும் தருமமும் கணக்கிட முடியுமா?
கரும தருமங்களால் கடைத்தேற மாட்டார்
விசுவதா பிராம கேளாய் வேமா.

192. '**தொம்மிதி கந்தல தித்திகி**'

ஒன்பது துவாரத் தோல்பை இதற்கு
ஆடை அணிகலன் குலம் என்பது எதற்கு?
தேகம் நிலைஎன நம்பிட வேண்டாம்
பிரம்மம்* நீஎனத் தெரிந்துகொள் வேமா.

193. '**தாமு உன்ன ஊரு க்ஷாமம்பு வாட்டில்ல**'

பிறந்த மண்ணில் பஞ்சம் வாட்டினால்
சொந்த ஊர்விட்டு அயல்ஊர் செல்வார்
ஏரியில் நீர்இன்றிக் காய்ந்து போனால்
கொக்குகள் அதிலே வாழாது வேமா

194. '**தனது ஆத்ம நுன்ன தெய்வம்பு காணக**'

ஆன்மாவின் உள்உள்ள தெய்வத்தைக் காணாமல்
புனிதநீர் நிலைகளைத் தேடிச் செல்வது
சந்தனக் கட்டையைக் கழுதை சுமந்திடும்
செயல்போல் ஆகிடும் கேளாய் வேமா.

* பிரம்மம் = முழு முதல் பொருள்

195. ***'தனகு லோனி ஜீவதத்வமு தெலியக'***

தனக்குள் இருக்கும் உயிரின் தத்துவம்
அறியாது ஆண்டவன் எங்கோ இருப்பதாய்
தேடுவது, கையில்தீவட்டி வைத்துக் கொண்டு
கதிரவனைத் தேடும் செயல்தான் வேமா.

196. ***'பாலு பஞ்சதார பாவர பண்ணலோ'***

பாலுடன் சர்க்கரை சேர்த்துச் சமைக்கினும்
எட்டிக் காயின் குணம் மாறாது
மந்த மாணவனின் குணத்தை மாற்றுமோ
குரு உபதேசம்? கூறுவாய் வேமா.

197. ***'உப்பு லேனி கூர உனம்பு ருகலகு'***

உப்பில்லாப் பண்டம் சுவைக்கு உதவாது
பருப்பில்லாப் பண்டம் பலனில் லாதது
கடனில் லாதவன் பணக்காரன் ஆவான்
விசுவதா பிராம கேளாய் வேமா.

198. ***'பிசினிவானி கிண்ட பீனுக வெள்ளெனோ'***

கருமியின் வீட்டில் பிணம்அது விழுந்தால்
அதனை எரித்திட விறகு வறட்டி சேலை
தண்டச் செலவென விக்கிவிக்கி அழுவான்
உலக இயல்பிது கேளாய் வேமா.

199. ***'எந்துகைன கானி ஏடாதி செப்பிதே'***

எருதென்றாலும் ஓராண்டு பழக்கினால்
உள்ளத்தை உணர்ந்து சொன்னதைச் செய்யும்
முப்பதாண்டு பழக்கினும் மூட மனிதன்
சொன்னதைச் செய்ய மாட்டான் வேமா.

200. *'பெண்டி மேளமுலகு பெத்தகா விஸ்துரு'*

பெண்களின் மேளத்துக்குப் பெருந்தொகை தருவார்
ஆண்களின்மேளத்துக்குஒருபாக்காவதுதரமாட்டார்
புண்களை மொய்க்கும் ஈக்கள் பூக்களைத்
தேடிச் செல்லாது அறிவாய் வேமா.

201. *'பூஜகன்ன நெந்த புத்தி நிதானம்பு'*

பூசையைக் காட்டிலும் சிறந்தது புத்திநிதானம்
பேச்சைக் காட்டிலும் சிறந்தது வைரநெஞ்சம்
குலத்தைக் காட்டிலும் சிறந்தது நற்குணங்கள்
விசுவதா பிராம கேளாய் வேமா.

202. *'உன்ன வாரி லெவ்வரு சன்னவா ரெவ்வரு'*

இருப்பவர் யார்யார் இறப்பவர் யார்யார்
இரு சாரரையும் பெற்றவர் யாரென்று
அறிய முடியுமா ? இருப்பவர் இறப்பவர்
அறிந்தவர் மூவரும் ஒருவரே வேமா.

203. *'வின்னி புத்தி கொன்னி வினிகி புத்திலு கொன்னி'*

கேட்டதும் கேள்விப் பட்டதும் சிற்சில
அற்ப புத்தியால் சூட்சுமம் அறியாமல்
எல்லாம் அறிந்த ஞானிபோல் பேசுவான்
விசுவதா பிராம கேளாய் வேமா.

204. *'எனுபதி நாலுகு லட்சலு'*

எண்பத்து நான்கு லட்சம் ஜீவராசிகள் என்று
சொல்லப் படுகின்ற ஜீவராசிகளில்
முதன்முதல் பிறந்த உயிரினம் எதுவென
சொல்பவனே உலகில் நீதிமான் வேமா.

205. *'மருபு சேத மானவ தேகம்பு'*

மறப்பதும் நினைப்பதும் ஆனஇம்மனித உடம்பு
இறப்பதும் பிறப்பதும் உலக இயல்பு
மறதி இல்லையேல் மரணம் வராது
விசுவதா பிராம கேளாய் வேமா.

206. *'அங்கி வெரிகி மாட்டலாட நேர்ச்சின சாலு'*

உண்மையறிந்து பேசக் கற்றால் போதுமானது
சிறியவன் பெரியவன் என்னும் பேதம் எதற்கு?
சிறியவன் கையில் ஏந்திய விளக்கால்
இருள் போகாதா கூறு வேமா.

207. *'பால வார்த்திக லோன பவளிஞ்சின வாடு'*

பாற்கடலில் படுக்கும் பாலகன் கண்ணனும்
இடையர் வீட்டுப் பாலுக்கு ஆசைப்பட்டதேன்?
மற்றவர் பொருள் மீது யாவரும் ஒருகண்
வைத்திடுவார் இது இயல்பு வேமா.

208. *'இனுமு விரிகனேனி இருமாடு மும்மாடு'*

இரும்பில் விரிசல் தோன்றினால் அதனை
இரண்டு மூன்றுமுறை காய்ச்சி ஒட்டலாம்
மனதில் விரிசல் தோன்றினால் அதனை
ஒட்ட முடியாது கேளாய் வேமா.

209. *'பல்லி பலுகுலுவினி ப்ரஜ தம பனுலெல்ல'*

பல்லி பலன் கேட்கும் மானிடர் நினைப்பவை
வெற்றி பெறும் என்று மகிழ்ந்திருப்பார்
தோல்வியில் முடிந்தால் கர்மத்தின் பலன்என்று
தேற்றிக் கொள்வார் அறிந்திடு வேமா.

210. *'தப்பு லென்னுவாரு தண்டோட தண்டம்பு'*

பிறர்குற்றம் காண்பவர் கோடானு கோடிபேர்
ஒவ்வொருவர் இடத்திலும் குறையென்பது உண்டு
பிறர் குற்றம் காண்பவர் தன்குற்றம் காணார்
விசுவதா பிராம கேளாய் வேமா

❀ ❀ ❀

# திருவள்ளுவரும் வேமனாவும்*

திருவள்ளுவரின் திருக்குறளிலும், தெலுங்கு தேசம் தந்த அறிஞர் யோகி வேமனாவின் பத்தியங்களிலும் (பாடல்கள்) இருக்கும் கருத்துக்கள் பல, ஒத்திருப்பதைக் காணலாம். திருவள்ளுவர் அறிவுரைகளைச் சொல்லக் கூடிய முறை சற்று நாகரிகமாகக் காணப்படுகிறது.

ஆனால் வேமனாவின் முறையோ சற்றுக் கடுமையானது. வள்ளுவர் அறம், பொருள் ஆகியவற்றைப் பாடியதுடன் காமத்துப் பாலையும் களவியல், கற்பியல் என இரு பிரிவாக்கிப் பாடியுள்ளார். ஆனால் வேமனாவோ பெண்ணினத்தை வெறுப்பராகவே அவர் பாடலில் இருந்து அறிய முடிகிறது.

கி.மு. 3ஆம் நூற்றாண்டிற்கும் கி.மு. முதல் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் திருவள்ளுவர் வாழ்ந்திருக்கலாம் என்பார் அறிஞர். வேமனாவோ கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

---

* நூலாசிரியர் எழுதிய இக்கட்டுரை 'குறள் மணம்' 1997-98 இதழ்களில் தொடர் கட்டுரையாக வெளிவந்தது.

நல்குரவு என்னும் அதிகாரத்தில் வரும்,

"இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு" (1048)

என்னும் குறளைக் கொண்டு ஆயும் போது வள்ளுவப் பெருந்தகை வறுமையில் வாழ்ந்த பெரியார் என்பதனை அறியலாம்.

ஆனால் வேமனாவோ குமாரகிரி வேமா ரெட்டி என்பவருக்கும் மல்லம்மாள் என்பவருக்கும் மகனாகப் பெரிய ஜமீன் குடும்பத்தில் பிறந்தவர்.

திருவள்ளுவடைய,

"இருமனப் பெண்டிரும், கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு"
(வரைவின் மகளிர் 920)

என்னும் குறளைக் கொண்டு, அவர் பிற பெண்டிர் தொடர்பும், கள்ளும், சூதும் நீக்கியவர் என்பதை அறியலாம்

வேமனாவோ, தமது இளம் வயதில் ஆடம்பரத்தை விரும்புபவராகவும், அருணகிரிநாதரைப் போலப் பரத்தையர் தொடர்பு கொண்டவராகவும் விளங்கினார்.

இவரைத் திருத்த வைத்த பெருமை இவருடைய அண்ணி சரசாம்பாளையே சாரும்.

இருமனப் பெண்டிர் என்போர் அற்பப் பொருளுக்காகத் தமது உடலை விற்பவரே ஆவார் இரு கவிஞர்களுமே இவர்களைப் பற்றி வன்மையாகக் கடிந்து பாடியுள்ளனர். இருமனப் பெண்களைத் தொடர்பு கொள்வோர் பற்றி ஆசிரியர் திருவள்ளுவர் கூறும்போது,

"பொருட்பெண்டிர் பொய்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று." (குறள் - 913)

என்று குறிப்பிடுகிறார்.

மனம் திருந்திய வேமனாவோ, பெண் உறவை அறவே வெறுப்பவராகக் காணப்படுகிறார். அதற்கு ஆதாரமான அவருடைய பாடலைப் பார்ப்போம்.

“தோலு தோலுன பெட்டி தோமங்க தோமங்க
முரிகி காரிகாரி முத்தகட்டு
முத்த சங்கபெட்டி முத்தாடனு ஆயரா
விசுவதா பிராம வினர வேமா”

மறைமுகமாகப் பொருள் உணரும் வண்ணம் அமைந்துள்ளது இச்செய்யுள். இரு உடல்களையும் சேர்த்துத் தேய்க்கத் தேய்க்க அழுக்குத் திரண்டு உருண்டை ஆயிற்று. அவ்வழுக்கு உருண்டையினை எடுத்துக் கொண்டு முத்தமிட்டுப் பாராட்டுமாறு ஆகிவிட்டதே என்கிறார் வேமனா.

இதன் மறை பொருள் வெளிப்படை. இந்த அளவுக்குப் பெண் இனத்தை வெறுக்கக் காரணமாக இருந்தது அளவுக்கு மிஞ்சிய இவருடைய இளமைப் பருவ நிகழ்ச்சிகளே ஆகும் என்பதில் ஐயமில்லை.

* * *

ஓர் அரசன் படை வலிமையும், நல்ல பருவமும் அறிந்து பகை மன்னவரைத் தாக்கப் புறப்படும் போது, தான் செல்லவிருக்கும் இடத்தையும் அறிதல் வேண்டும். நமது நாட்டின் புவியியல் அமைப்பு, வெப்ப தட்பம் ஆகியவை நமக்கு ஏற்றவையாக இருக்கலாம். ஆனால் மாற்றாருடைய நாட்டின் நிலையும் நமக்குப் பொருந்தும் என்பது என்ன நிச்சயம் ? அவரவர்களின் இருப்பிடம் அவரவர்களுக்கு வாய்ப்பாக இருக்கலாம். ஆனால், நமக்கு எப்படியோ. எனவே, பிறரைச் சந்திக்கச் செல்லும் போது சற்று முன் சிந்தனையுடன்தானே செல்ல வேண்டும். ஆழம் தெரியாமல் காலை விடலாமா ?

இக்கருத்தை திருவள்ளுவரும் வேமனாவும் பிறிது மொழிதல் அணியில் கூறி இருப்பது நமக்கு வியப்பை அளிக்கிறது (பிறிது மொழிதல் அணி என்பது கவிஞன் தான் சொல்லக் கருதும் பொருளை வெளிப்படையாகக் கூறாமல் பிறிதோர் உவமை மட்டும் கூறி விளக்குவது).

முதலையின் வாழிடம் நீர். அந்நீரில் இருக்கும் போது மற்ற விலங்குகளை எல்லாம் அது வென்று விடும் ஆற்றல் பெற்றிருக்கும். ஆனால், அதே முதலை அந்நீரில் இருந்து நீங்கி நிலத்திற்கு வருமானால் அதனை மற்ற விலங்குகள் எளிதில் வென்றுவிடும். ஆகவே, நீராகிய இடத்தின் பலம் தான் முதலைக்கு. இக்கருத்தைத் திருவள்ளுவர்,

"நெடும்புனலுள் வெல்லும்முதலை அடும் புனலின்
நீங்கின் அதனைப் பிற" (குறள் 495)

என்று கூறியுள்ளார்.

இதே கருத்தை வேமனா இக்குறளுக்கு விளக்கம் கூறுபவர் போல, "நீரில் இருக்கும் போது முதலை அந்நீரின் வலிமையினால், வலிமை மிகுந்த யானையையும் வென்றுவிடும்; ஆனால் அதே முதலை நீரிலிருந்து நிலத்திற்கு வருமானால் தன்னைவிட எளிய விலங்காகிய நாயினால் கூடத் துன்புறும்" என்று கீழ்வருமாறு பாடியுள்ளார்

"நீள்ள லோனி முசலி நிகுடி னேுகதீசு
பைட்ட குக்க சேத பங்கபடுனு
ஸ்தான பலமுகானி தனபலமு காதயா
விசுவதா பிராம வினர வேமா"

* * *

திருவள்ளுவர் உலோபியிடமிருந்து பொருளைப் பெற்று வறியோர்க்கு வழங்கும் வழியைக் கயமை என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார்.

இல்லையென்று கேட்பவர்களுக்குத் தமது ஈரமான கையையும் விதிர்க்காத செல்வந்தர்களிடமிருந்து பொருளை வாங்க வேண்டுமானால், அவர்களுடைய கொடிறு (கன்னம்) உடைப்பது போல் அடிக்கின்ற வளைந்த கையை உடையவரால்தான் முடியும். அப்படிப் பட்டவர்களைத் தவிர உலோபிகள் பிறருக்கு உதவ மாட்டார்கள் என்னும் திருவள்ளுவரின் இக்கருத்து (1077), முடியுடை வேந்தர்கள் வாழ்ந்த காலத்தில் கூறப்பட்ட முற்போக்குக் கருத்து ஆகும்.

அண்மைக் காலத்தில் பேசப்பட்டு வரும் கார்ல் மார்க்ஸ் (KARL MARX) கொள்கையே உலகில் எழுப்பப் பட்ட முதல் பொதுவுடைமை வாதம் என்று கூறி வருகின்றனர்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகு இயற்றியான்"

என்னும் குறள் (1062) ஆழமான பொருள் உடையதாகும்.

* * *

'எட்டி வானிகி ஜன புட்டுனு மோகம்பு' (எப்படிப் பட்டவனுக்கும் மோகம் பிறக்கும்) என்று கூறிய வேமனா உண்மைத் துறவியைத் தேடித்தான் கண்டறிய வேண்டும் என்கிறார். விலைமகளிரை வாயில் வந்தபடி சாடுகிறார் வேமனா.

ஆனால் திருவள்ளுவரோ அப்படிப்பட்ட பெண் களிடம் (வரைவு இல் மகளிர்) தொடர்பு கொள்ளும் ஆண்களைத்தான் கண்டிக்கிறார் (குறள்கள் 914 - 919).

'கல்வி' என்னும் அதிகாரத்தை எழுதிய திருவள்ளுவர் வேதக் கல்வியைப் பற்றிய பேச்செடுக்கவில்லை. (வள்ளுவர் காலத்திலேயே வேதக் கல்வி தமிழகத்தில் இருந்தது).

வேமனா வேதக் கல்வி வேசியர்க்குச் சமமானது ('வேத வித்ய லெல்ல வேசியவ வுண்டி தி' என்று கூறிப் பிரம்மத்தை அறியும் கல்வியைத் தேடிக் கற்கச் சொல்கிறார்.

பெண்ணினத்தையே வேமனா வெறுக்கக் காரணம் அவர் விலை மாதருடன் கொண்ட அளவுக்கு மிஞ்சிய தொடர்பே என்று அவருடைய பாடல்களில் இருந்து அறிய முடிகிறது.

ஆனால் திருவள்ளுவரோ இன்பத்துப் பால் (காமத்துப் பால்) என்னும் ஒரு பெரும்பகுதியை அதாவது 250 குறள்களைத் தமது நூலில் எழுதியுள்ளார். "மலரினும் மெல்லியது காமம்" (1289) என்னும் சொற்றொடர் அகப் பொருளில் வள்ளுவர் கொண்டிருந்த ஆழமான சிந்தனை யும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

தாமரை மலர் போன்ற கண்களையுடைய பெண்களைக் கண்ட பொழுதும் போலித் துறவி மனம் நெகிழ்வான். அவனை நம்பக்கூடாது. மனதைச் சலனமின்றி நிறுத்தியவன் எவனோ அவனே பரமயோகி என்கிறார் வேமனா

ஒரு காலத்தில் சமயத் துறவிகளின் சீருடை களாக இருந்தவை இன்று எவர் வேண்டுமானாலும் அணிந்து கொண்டு துறவி என்ற பெயரில் நடமாடுவது இயல்பாகி விட்டது. உண்மைத் துறவிக்கு ஊருக்குள் வேலையே கிடையாது. துறவிகளின் உறைவிடம் மனித நடமாட்டம் இல்லாத காடு என்பதை நமது புராணங்களும் இலக்கியங்களும் கூறுகின்றன.

துறவு வாழ்க்கை கூட இல்லற வாழ்க்கைக்குப் பிறகு தான் என்பதை,

காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.

(தொல் : கற்பியல் : 51)

என்னும் தொல்காப்பிய நூற்பா கூறுகிறது.

திருவள்ளுவரின் கவலையெல்லாம் வேடன் புதருக்குப் பின்புறம் மறைவாக நின்று கொண்டு பறவையை வேட்டையாடுவது போல, போலித்துறவி தான் அணியும் உடையின் துணையால் தனது தீய இச்சைகளைத் தீர்த்துக் கொள்கிறான் என்பதுதான். இதனை தமது குறளில்,

"தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வெட்டுவன் புள்சிமிழ்த் தற்று" (குறள் 274)

என்று குறிப்பிடுகிறார்.

திருவள்ளுவர் வாழ்ந்த கால கட்டத்திலேயே போலித் துறவிகளின் தீயொழுக்கங்கள் தலை விரித்தாடிய காரணத்தினால்தான் 'கூடாவொழுக்கம்' என்னும் ஓர் அதிகாரம் எழுத வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது.

தற்காலத்தில் அன்றாடச் செய்தித்தாள்களைப் பார்த்தால் அவற்றில் ஏதேனும் ஒரு பக்கத்தில் கண்டிப்பாக போலித்துறவிகளைப் பற்றிய திருவிளையாடல்கள் இடம் பெற்றிருப்பதைப் பார்க்க முடிகிறது.

அப்படியானால் உண்மைத் துறவிகளையும், போலித் துறவிகளையும் சமுதாயத்தில் எப்படி இனம் கண்டு கொள்வது ? அவர்களின் வெளித் தோற்றத்தை மட்டும் வைத்துப் பார்க்காமல் அவர்களுடைய செயலை வைத்துப் பார்க்க வேண்டும். கணை (அம்பு) நேராக நிமிர்ந்திருப்பதால்

அது நல்லதென்றும், யாழின் கோடு (கொம்பு) வளைந்திருப்பதால் அது தீயதென்றும் தீர்மானிப்பதைப் போன்றது தான் துறவிகளின் வெளித் தோற்றத்தைக் கண்டு ஏமாறுவதும்.

இதற்கு மாறாக கணையின் செயலையும், யாழின் செயலையும் வைத்துப் பார்த்தால் அவற்றின் இயல்பு எளிதில் விளங்கிவிடும். இதனை,

> கணைகொடிது யாழ்கோடு செவ்விது ஆங்குஅன்ன
> வினைபடு பாலால் கொளல். (குறள் 279)

என்கிறார் வள்ளுவர்.

வேமனாவோ அனைவர் மனமுமே சலனம் உடையது என்கிறார்.

> வெர்ரி வானிகைன வேஷதாரிகைன
> ரோகிகைன பரமயோகி கைன
> ஸ்திரீல ஜூசினபுடு சித்தம்பு ரஞ்சில்லு
> விசுவதா பிராம வினர வேமா

என்று கூறுகிறார்.

பைத்தியக்காரன் என்றாலும், வேடதாரி ஆனாலும், நோயாளி ஆனாலும் பரமயோகியே ஆனாலும் பெண்களைக் கண்டவுடன், மனமானது சபலமடையும் விசுவதா பிராம! கேளாய் வேமா! என்பது இதன் பொருள்.

ஆகவே போலித் துறவிகளைக் கண்டவுடன் மதி மயங்கி விடக் கூடாது. இல்லறத்தில் இருந்து துறவியாக வாழ்பவர்களும் உள்ளனர். ஒருவன் இல்லற வாழ்க்கையை வாழ வேண்டிய முறையில் வாழ்ந்து வருபவனாக இருப்பின், அவன் வேறு நெறியில் சென்று அடையப் போகும் பலன் கிடையாது. இதனை திருவள்ளுவர்,

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்? (குறள் 46)

என்கிறார்.

இக்குறளுக்குப் பொருள் கூறப் புகுந்த பரிமேலழகர் 'அறத்தாறு' என்பதற்குப் பழி அஞ்சிப் பகுத்து உண்டலும், அன்புடைமையும் என்றும், 'புறத்தாறு' என்பதற்கு வீட்டை விட்டு வனத்துச் செல்லும் நிலை என்றும் கூறுகிறார்.

அடவி திருகலேது ஆகாசமுன லேது
அவனி தீர்த்த யாத்திர லந்து லேது
ஒடலு சுத்திசேசி ஏடயுனி சூடரா
விசுவதாபி ராம வினர வேமா.

'காட்டில் அலைந்து திரிந்தாலும் கிடைக்காத பொருள். அது வானத்திலும் இல்லை. உலகில் புனித நீர்நிலைகள் என்று கருதப்படும் தீர்த்தங்களிலும் கிடையாது. மனத்தைத் தூய்மைப்படுத்தி அந்த இடத்திலே இருக்கிறதா என்று பார்' என்பது மேற்குறிப்பிட்ட பாடலின் பொருளாகும்.

வேமனா கூறும் உண்மைப் பொருளைக் காண்பவனே உண்மையான யோகியும், துறவியும் ஆவான். போலித் துறவிகளைக் கண்டு உலக மக்கள் ஏமாறி விடக் கூடாது என்பதற்காகவே இரு பெரும் புலவர்கள் போலித் துறவிகளின் இயல்புகளையும், குணம், செயல்களையும் படம் பிடித்துக் காட்டியுள்ளனர் அவர்கள் கூறிய அறிவுரைகளைப் பின்பற்றுவது நம் அனைவரின் கடமையாகும். இதற்கு மாறாக போலித் துறவிகளை இன்றைய சமுதாயம் ஊக்கப்படுத்தி வருவது வருந்தத் தக்கதாகும்.

திருக்குறளில் இல்லற இயலுக்குப் பிறகு துறவற இயலின் முதல் அதிகாரம் அருளுடைமை. இந்த அதிகாரத்திற்குப் பிறகு மூன்றாவது அதிகாரமாக அமைந்திருப்பது கூடா ஒழுக்கம். துறவியானவன் அனைத்தும் நிலையற்றவை என்பதை உணர்ந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவன் அனைத்தையும் அறிந்த துறவியாக இருக்க முடியும். ஆகவே திருவள்ளுவர் நிலையாமையைத் துறவு என்னும் அதிகாரத்திற்கு முன்பு வைக்கிறார்.

உலகில் தோன்றும் பொருள்கள் அனைத்தும் மறையும் என்னும் பொதுக் கருத்து ஒன்று நிலவுகிறது. நிலையற்ற பொருள்களை நிலையானவை என்று உணர்கின்ற தன்மையைப் புல்லறிவு என்றும் அது இழிவானது என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

குடம்பைத் தனித்து ஒழியப்புள் பறந்தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு (குறள் 338)

என்னும் குறளில் உடம்புக்குப் பறவையின் கூட்டையும், உயிருக்குப் பறவையையும் உவமையாகக் கூறியுள்ளார் வள்ளுவர்.

இக்குறளுக்கு உரை கூறும் சிலர் குடம்பை என்பது முட்டையென்றும் பொருள் கூறுவார்கள். முட்டையில் இருந்து வெளியேறிய பறவை எவ்வாறு மீண்டும் முட்டையைப் புகலிடமாகக் கொள்ள முடியாதோ அதுபோல் உடம்பிலிருந்து வெளியேறிய உயிர் மீண்டும் அவ்வுடம்பினுள் புக முடியாது என்று வள்ளுவர் குறிப்பிட்டுவிட்டு 'நிலையாமை' அதிகாரத்தின் இறுதிக் குறளில் உடம்பில் குடியிருக்கும் உயிருக்கு நிலையான வீடு ஒன்று இல்லை போலும் என்று குறிப்பிடுகிறார்.

இதே கருத்தை வேமனா எவ்வாறு கூறுகிறார் என்று பார்க்கலாம்.

*மண்டி குண்ட அண்டி மாய சரீரம்பு*
*சச்சுனு என்னடுகு ஐன சாவது ஆத்மா*
*கடமு ஒக்கடி ஐதே ககலம்பு ஒக்கடியா*
*விசுவதா பிராம வினர வேமா*

இந்த உடம்பு மாயை ; மண் குடம் போன்றது. என்றைக்கு ஆனாலும் இது இறக்கும் தன்மையுடையது. இது என்றைக்கு ஆனாலும் அழியும். இதன் உள் இருக்கும் ஆத்மா என்றைக்கு ஆனாலும் சாகாது. இது மேலே குறிப்பிட்ட பாடலின் பொருள்.

உடல் நிலையல்ல; அப்படியிருக்க அதனை யாருடைய செல்வமென்று பாதுகாத்து வருகிறாய் ? உனது உயிர் யாருடைய செல்வம் ? அன்றாடம் பக்தி செய்வதற்குச் செலவு செய்கிறாயே, அது யாருடைய செல்வம் ? அனைத்துச் செல்வங்களும், அழியக் கூடியதே. ஆகவே இயன்ற அளவு 'அறம்' செய்வாயாக. அதுவே நிலையான செல்வம். ஆகவே, 'அறம் செய் வேமா' என்று ஒரு பாடலில் குறிப்பிடுகிறார் வேமா.

*ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே*
*செல்லும்வாய் எல்லாம் செயல். (குறள் 33)*

என்னும் குறளையும்,

*அன்றுஅறிவாம் என்னாது அறம்செய்க மற்றது*
*பொன்றுங்கால் பொன்றாத் துணை (குறள் 36)*

என்றும் குறளையும் வேமனாவின் பாடலுடன் ஒப்பு நோக்க வேண்டியுள்ளது.

* * *

பிறர்க்கு உதவாமலும் தான் நுகராமலும் பெருஞ் செல்வம் சேர்த்தும் பதுக்கியும், புதைத்தும் வைத்து விட்டு சாகும் போது எவரிடமும் சொல்லாமல் மறையும் மாந்தர் பலர் வேமா !

நீரின் மேல் நீர்க்குமிழி நிற்கும். அப்போது நீர் வேகத்துடன் வந்து தாக்கும் அல்லவா ? நிலையற்ற அழியும் தன்மையுள்ள இந்த உடலெனும் கூட்டிற்காக (பானை) எவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள் இவ்வுலக மக்கள். இவை வேமனாவின் தத்துவ முத்துக்கள்

வேறுபட்ட கால கட்டங்களில் வாழ்ந்தவர்கள் இவ்விரு புலவர்கள். இருவரின் மொழிகளும் வேறுபட்டவை திருவள்ளுவர் முன்னவர். மொழியாலும் நாட்டாலும் இடத்தாலும் வேறுபட்டவர்கள். ஆனால் சிந்தனை ஒன்றாக உள்ளது.

நீள்ளமீத புக்க நிலசின அப்புடு
நீள்ளு வேக வச்சி தாகுகாத
விட்டு குண்டகிந்த விஸ்ப்ராந்தி படுதுரு
விசுவதா பிராம வினர வேமா.

நீரின் மொக்குள் போன்றது என்று மனித வாழ்க்கையை உருவகப்படுத்திய வேமனாவின் பாடல் மேலே காட்டப்பட்டுள்ளது.

கண்டி காவரமுன காணடு மரணம்பு
மதமுசேத தத்வ மகிம காணடு
போக வாஞ்ச சேத பரஹரு காணடு
விசுவதா பிராம வினர வேமா

என்னும் பாடலில், வேமனா கண் கொழுப்பின் காரணமாக மரணம் சமீபத்தில் இருப்பதை மனிதன் அறிய

மாட்டான். மதத்தின் காரணமாகத் தத்துவத்தின் மகிமையை மனிதன் அறியாமல் போகிறான். உடல் இன்பம் காரணமாகப் பரம்பொருளை மனிதன் காண முடியாமல் போகிறான் கேளாய் வேமா என்கிறார்.

வேமனாவின் கருத்துகளுடன் திருவள்ளுவரின் கருத்துகளை ஒப்பு நோக்குவோம். துறவு என்னும் அதிகாரத்தில்,

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு (குறள் 343)

என்கிறார்.

ஐம்புலன்களால் உண்டாகும் இச்சைகளை விடல் வேண்டும். மேலும் இதே அதிகாரத்தில் திருவள்ளுவர், பிறவித் துன்பத்திலிருந்து தப்ப வேண்டும் என்னும் ஆவல் உடையவர்களுக்கு உடம்பும் கூட மிகையானது (343). ஆகவே பற்றற்றான் பற்றினைப் பற்ற வேண்டும். அப்போது தான் மற்ற பற்றுகளைவிட முடியும் என்பதை,

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு (குறள் 350)

என்று கூறுகிறார்.

மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில்,

காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய் (குறள் 360)

என்கிறார்.

* * *

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியில் தங்குதல் தீது (குறள் 671)

என்னும் குறள், 'வினைசெயல்வகை' என்னும் அதிகாரத்தில்

வரும் முதல் குறள் ஆகும். இக்குறளின் மூலம் வள்ளுவர் கூறும் கருத்தாவது, ஆராய்தலின் முடிவு துணிந்து செயல்படுவதே ஆகும். அவ்வாறு செயலைச் செய்யத் துணிவதில் தாமதம் காட்டுவது தீமையாக முடியும் என்பது.

ஆனால் இதே அதிகாரத்தில் இரண்டாம் குறளில், காலம் தாழ்த்துச் செய்ய வேண்டிய செயல்களைக் காலம் தாழ்த்துச் செய்ய வேண்டும். விரைவில் செய்யப்பட வேண்டிய செயல்களை ஆற்றுவதில் காலம் தாழ்த்தக் கூடாது என்னும் பொருளில்,

தூங்குக தூங்கிச் செயல்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை (குறள் 672)

என்று கூறுகிறார் குறளாசிரியர்.

வினை செயல் வகையைப் பற்றித் தனியாக ஓர் அதிகாரம் எழுதவில்லை என்றாலும், வேமனா கீழே குறிப்பிடும் பாடலின் வாயிலாக விரைந்து செய்ய வேண்டிய செயல்கள் எவை என்றும், தாமதித்து செய்ய வேண்டிய செயல்கள் எவை என்றும் கூறியுள்ளார்.

தாமதின்சி செயதகா தெட்டி கார்யம்பு
வேகரிம்ப நதியு விஷமெ யகுனு
பச்சிகாய தெச்சி படவேய பலமன்னா
விசுவதா பிராம வினர வேமா

பசுங்காயை செடியில் விட்டுவிட்டுத் தானே பழுக்கட்டும் என்று நினைத்தால் அந்தக் காய் பறவைகளுக்கு இரையாகிவிடும். முன்னதாகப் பறித்துப் பழுக்க வைத்தாலும் அது இயலாத செயலாகும். ஆகவே சில செயல்களைப் பிறகு செய்யலாம் என்று விட்டு விட்டாலும், அவசரப்பட்டு விரைவில் செய்தாலும்

தீமையாக முடியும். ஆகவே வேமா, கனியை மரத்திலிருந்து பக்குவம் அறிந்து கொய்வது போலச் செயல்களையும் தருணத்தில் செய்ய வேண்டும் - இதுவே மேற்காணும் பாடலின் பொருளாகும்.

* * *

'இடன் அறிதல்' என்னும் அதிகாரத்தில் வரும்,

"நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற" (குறள் 495)

என்னும் குறளுடன், 'நீள்ள லோனி முசலி' என்று தொடங்கும் வேமனாவின் பாடலை முன்பே ஒப்பிட்டு உள்ளோம்.

இதேபோல மீனின் செயலை உவமையாகக் கூறும் இரு பெருங் கவிஞர்களின் திறன் வியந்து போற்றும் வண்ணம் அமைந்துள்ளது.

வேண்டற்க வேண்டினும் சூதினை வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று (குறள் 931)

இக்குறட்பா 'சூது' என்னும் அதிகாரத்தில் வரும் முதல் குறள். வெற்றியே பெற்றாலும் சூதாட்டத்தை கற்க வேண்டாம். சூதாட்டத்தில் பெறும் வெற்றி எதனைப் போன்றது என்றால் தூண்டிலின் நுனியில் உள்ள இரும்பில் செருகப்பட்டுள்ள இரையை உண்ண விரும்பிய மீன் அதைக் கவ்வ முயன்று தூண்டிலில் உள்ள இரும்பு முள்ளுக்கு தான் பலியாவதைப் போலத்தான் என்பது இதன் பொருள்.

தூண்டில் முள்ளில் உள்ள இரையை உண்ண நினைத்து ஏமாறுவது போலத்தான் சூதாடிகளின் செயலும். சிறு வெற்றியை நம்பி ஏமாறுவார்கள்.

இக்கருத்தினை விளக்க யோகி வேமனாவும் மீனின் செயலையே உவமையாகக் கூறுகிறார்

நீரில் வாழும் மீன் தூண்டிலில் உள்ள அற்ப இறைச்சிக்காக மதி மயங்கித் தூண்டில் முள்ளில் அகப்பட்டுக் கொள்வது போல், மனிதன் இவ்வுலகின் அற்ப ஆசைகளில் பட்டு மயங்கி அழிகிறான். இக்கருத்தை வேமனா,

நீள்ள லோனி சேப தெரிமாம்ச ஆசகு
காலமந்து ஜிக்கி கூலி நட்லு
ஆசபுட்டி மனுஜு டாரீதி செடிபோவு
விசுவதா பிராம வினர வேமா

என்று கூறியுள்ளார்.

உயர்ந்தோரிடமிருந்து இழிந்த சொற்களும் இழிந்தோரிடமிருந்து உயர்ந்த சொற்களும் சில நேரங்களில் வெளிப்படுவதை அன்றாட வாழ்க்கையில் நாம் கேட்க முடிகிறது. இதன் காரணமாக எழுந்த குறள்கள் தாம்,

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும் (ஊழ் : 373)

என்பதும்,

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (அறிவுடைமை 423)

என்பதும்.

எவ்வளவுதான் படித்துப் பட்டங்கள், பதவிகள் பெற்றிருப்பினும், பொது அறிவு பெற்றிருப்பினும் அவரவர்க்கு என்று இருக்கும் அறிவே மிகுந்து காணப்படுகிறது. அதற்கு ஏற்ற சொற்களே அவர் மூலம்

வெளிப்படுவதைக் கேட்கலாம். இதற்கு ஒருவரின் மரபு நிலையும் காரணமாகலாம். சூழ்நிலையால் ஒருவரின் மரபு நிலையினை எவ்வளவு தான் மாற்ற முயற்சி செய்யினும் சில நேரங்களில் போதிய வெற்றி கிட்டாமல் போய் விடுகிறது.

தேனையும், பாலையும் வேம்புக்குப் பாய்ச்சுவதால் வேம்பு இனிய கனியைத் தந்து விடுமா ? இதனை வேமனா எளிய எடுத்துக்காட்டு மூலமாகக் கூறுவதைக் கீழ்வரும் பாடல் காட்டுகிறது.

எவ்வெவரி குணமு ஏமைன மாறது
சக்க பெட்ட வசமே குக்க தோக

எவ்வளவு முயற்சி செய்தாலும் எவரது குணத்தையும் முழுவதும் மாற்றிவிட இயலாது. எவ்வாறு எனில் நாயின் வாலை நிமிர்த்தி வைத்துள்ள வரைதான் அது நிமிர்ந்து இருக்கும். வாலை நமது பிடியிலிருந்து விட்டுவிட்டால் பழையபடி சுருண்டு விடும். இது மேலே குறிப்பிட்ட பாடலின் பொருள்.

மற்றொரு பாடலில் வேமனா, எலியின் தோலைக் கொண்டு வந்து ஓராண்டு துவைத்து வெண்மையாக்க முயன்றாலும், கருமை நிறத்தில் இருந்து அதை மாற்றிவிட முடியுமா ? மரப் பாவையைக் கொண்டு வந்து தடி கொண்டு அடித்தாலும் ஒரு சொல்லேனும் பேசுமா ? இவை இரண்டும் இயலாத செயல்கள் அல்லவா ? முயற்சி விழலுக்கு இரைத்த நீராக ஆகுமே.

பாடல் பிறந்தது பண்டிதனிடமிருந்து அல்ல. ஆனால் சுந்தரத் தெலுங்கு என்று பாரதி கூறினானே அச்சுவையை இப்பாடலில் காண முடிகிறது.

எலிக தோலு தெச்சி எடாதி உதிகினா
நலுபு நலுபே கானி தெலுபு காது
கொய்ய பொம்ம தெச்சி கொட்டினா பலுகது
விசுவதா பிராம வினர வேமா.

* * *

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே

என்று தொடங்கும் ஆரியப்படை நடந்த பாண்டியன் நெடுஞ்செழியனுடைய புறப்பாட்டில் (183) அவன் காலத்தில் சமுதாயத்தில் நான்கு பிரிவுகள் காணப்பட்டன என்பதையும், உயர்குடியில் பிறந்தவன் கல்லான் ஆயின் கீழானவன் என்றும், கீழ்க்குடியில் பிறந்தும் ஒருவன் கற்றிருந்தால் அவன் மேலானவன் என்றும் கூறுகின்றான் இதனை,

வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே

என்று குறிப்பிடுகிறான்.

ஆனால் திருவள்ளுவரோ, மனித சமுதாயத்தை மட்டுமல்லாது உலக உயிர்கள் அனைத்தையும் சமநிலையில் வைக்கும் தொலைநோக்கு உள்ளவராகத் தமது குறளில், 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' (972) என்னும் தமது கருத்தை பெருமை என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார்

மனித குணங்களில் பெருமை சிறுமை பற்றி மேற் குறிப்பிட்ட அதிகாரத்தில் திருவள்ளுவர் ஆராய்வதால், 'அனைத்துயிர்களும் சமம்' என்று கருதுதல் மனிதனுக்குப் பெருமை தரும் செயலாகும் என்று கருதலாம்

இக்குறட்பாவினை திருவள்ளுவர் 'ஒப்புரவறிதல்' என்னும் அதிகாரத்தில் ஏன் அமைக்கவில்லை என்னும் ஐயம் எழ வாய்ப்பு உண்டு.

'ஒப்புரவறிதல்' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் பெரும்பாலும் அலசுவது மனித சமுதாயத்திலுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வு பற்றியும், அந்நிலையைச் சீராக்குவது பற்றியும் எனலாம். ஆனால் மனிதனைத் தவிர வேறு விலங்குகளும் பறவைகளும் அடுத்த நாள் தேவைக்கென்றும், சந்ததிகளுக்கென்றும் பொருள் சேர்த்து வைக்காத இயல்புடைய காரணத்தால் அனைத் துயிர்களைப் பற்றி ஒப்புரவறிதலில் ஆசிரியர் கூறாது அனைத்துயிர்களையும் சமம் என்று ஒருவன் கருதுவது அவனுக்குப் பெருமை தரும் செயல். ஆதலால் 'பெருமை' என்னும் அதிகாரத்தால் கூறி இருக்க வேண்டும்.

பிறப்பால் ஒருவன் உயர்ந்தவன் என்றும் தாழ்ந்தவன் என்றும் கருதுவது சரியல்ல. ஒருவனுடைய நற்குணங்களும் செயல்களுமே அவனை உயர்ந்தவன் ஆக்குகின்றன என்பதை வால்மீகி முனிவரை எடுத்துக் காட்டி விளக்குகிறார் வேமா.

அறியாமை, மூடத்தனம் என்பார்கள். ஒரு மனிதன் அறியாமை நிறைந்தவனாக இருக்கும் வரையிலும் அவனை சூத்திரன் என்று கூறலாம். பிரம்ம ஞானம் ஏற்பட்டுவிட்டால் ஒருவனை பிரம்ம ஞானி என்று அழைக்கலாம். அறியாமையில் ஆழ்ந்து கிடந்த வேடன் வால்மீகி பிரம்மத்தை அறிந்த பிறகு 'பிரம்மரிஷி' என்று அழைக்கப்பட்டான். ஆகவே உயர்ந்த குலம், தாழ்ந்த குலம் என்பது ஒருவன் பிறக்கும் குலத்தை வைத்துத் தீர்மானித்தல் தவறு என்னும் பொருளில்,

அஞ்ஞானமுமே சூத்ர தத்வமு
ஸுக்ஞானமுமே ப்ரம்மனுட ஸ்ருதுலனு வினூரா
யக்ஞான முடிகு வால்மீகி
ஸுக்ஞானபு பிரம்ம மொந்தே ஜுடர வேமா

என்று பாடுகிறார் வேமா. (பிரம்மம் - அனைத்தும் சமம்)

வேறு ஒரு பாடலில், "பசுக்களின் நிறங்கள் வேறு வேறாக இருப்பினும் பாலின் நிறம் ஒன்றே மலர்கள் பலவகையாக இருப்பினும் வழிபாடு செய்யும்போது அவை ஒன்றாகவே கருதப்படுகின்றன. பரம்பொருளினை பலர் பல வடிவங்களில் வழிபாடு செய்தாலும் அப்பரம் பொருள் ஒன்றே அல்லவா ? கேளாய் வேமா" - என்னும் பொருள் அமைய,

பசுல ரூப வேற பாலு ஒக்க வர்ணமௌ
புஷ்ப ஜாதி வேற பூஜ ஒக்கடே
தர்சனம்புலு வேற தெய்வம் ஒக்கடே
விசுவதா பிராம வினர வேமா

என்று பாடியுள்ளார்.

'தெய்வம் ஒன்று' என்னும் தமது கருத்தினை வேமனா மேற்காணும் பாடலின் மூன்றாம் அடியின் கடைசி இரு சீர்களில் கூறியுள்ளார்.

திருவள்ளுவர் 'அ' என்னும் எழுத்தை எழுத்துக்கள் முதன்மையாகக் கொண்டிருப்பதைப் போல ஆதிபகவனை (முழு முதல் பொருளை) உலகம் முதலாகக் கொண்டுள்ளது என்று கூறியுள்ளார்.

ஆதிபகவனைக் கூறிய திருவள்ளுவர், ஆதிபகவனுக்கு உரிய குணங்களையும் மற்ற குறட்பாக்களில் கூறியுள்ளார் வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல்

வேண்டாமை இலான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இலான், அறவாழி அந்தணன், எண்குணத்தான் ஆகிய பெயர்கள் மற்றவை. 'மடி இன்மை' என்னும் அதிகாரத்தில் 10ஆம் குறட்பாவில் 'அடியளந்தான்' என்னும் சொல்லை திருவள்ளுவர் எடுத்தாண்டுள்ளார். இச்சொல், திருமால் எடுத்ததாகக் கருதப்படும் பத்து அவதாரங்களுள் ஒன்றாகிய வாமன அவதாரத்துடன் தொடர்புப்படுத்திப் பேசப்படுகிறது.

கடவுள் வணக்கத்தில் வரும் 'மலர்மிசை ஏகினான்' என்னும் சொல்லுக்குப் பலரும் பலவாறு பொருள் கூறி வருகின்றனர். சிலர் கடவுள் வாழ்த்திலுள்ள பத்து குறட்பாக்களும் பிறருடைய இடைச் செருகல் என்று கூறுகின்றனர். இவர்களுடைய கூற்றை ஏற்றுக் கொள்வதாக இருப்பின் மற்ற சில அதிகாரங்களையும் ஏன் இவ்வாறு பிறர் சேர்ந்திருக்கக்கூடாது என்னும் வினா எழுவது இயல்பே. இது ஆய்வுக்கு உரியது.

* * *

இன்னா (தீமை) செய்தவர்களைத் தண்டிக்கும் வழியைக் கூறும் திருவள்ளுவர்,

> இன்னா செய்தாரை ஒருத்தல் அவர்நாண
> நன்னயம் செய்து விடல் (குறள் 314)

என்கிறார்.

அதாவது நமக்குத் தீங்கு செய்தவர்களைத் தண்டிக்க வேண்டுமானால் அவர்கள் நாணம் அடையும்படியான நன்மையைச் செய்துவிடல் வேண்டும் என்பது இதன் பொருள். இதற்கு உரை எழுதிய பரிமேல்அழகர். அவர் (தீமை செய்தவர்) தாமே நாணுமாறு அவர்க்கு இனிய உதவிகளைச்

செய்து அவ்விரண்னையும் மறப்பது என்று கூறுகிறார் இங்கு இரண்டு என்று பரிமேல அழகர் கூறியது அவர் நமக்குச் செய்த தீமையையும் அவருக்கு நாம் செய்த நன்மையும் தாம்.

சம்பதகின அட்டி சத்ருவு தனசேத
சிக்கினேனி கீடு சேயராது
பொசகமேலு சேசி பொம்மனுடே சாலு
விசுவதா பிராம வினர வேமா

இது யோகி வேமனாவின் பாடல்.

நமக்குத் தீங்கு செய்தவன் நமது கையில் அகப்பட்டால்கூட அவனுக்குத் தீங்கு செய்யக்கூடாது அதற்கு மாறாக மேலான உதவியைச் செய்து அனுப்புவதே போதுமானது என்பது இதன் பொருள்

இன்னாத (தீமை) செய்வதற்கு உச்ச கட்டத்தைக் கூறும் போது 'இணர்எரி தோய்வன்ன இன்னா செய்யினும்' (குறள் 305) என்று குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். பல சுடர்களை உடைய நெருப்பு வந்து தோய்ந்தது போன்ற தீமை என்று பரிமேலழகர் இக்குறளுக்கு விளக்கம் கூறியுள்ளார்.

எப்படிப்பட்ட தீமை செய்தவர்களையும் நாம் மன்னிக்க வேண்டும் என்பதை கூறப் புகுந்த வேமனா மேலே குறிப்பிட்ட பாடலில் மரண தண்டனையே கொடுக்கப்பட வேண்டிய தீமை செய்துவிட்ட ஒருவன் நம் கையில் அகப்பட்டாலும்கூட நாம் அவனுக்குத் தீங்கு செய்யக்கூடாது; மாறாக அவன் விரும்பும் நன்மையைச் செய்து போகச் சொல்லிவிட வேண்டும் என்கிறார்.

நன்னயம் செய்துவிடல் - 'விடல்' என்பதன் நேர்ப்பொருள் தருவதாக 'பொம்மனுடே சாலு' என்னும் வேமனாவின் சொற்கள் அமைந்துள்ளன. ஆனால் நமக்குத் தீமை செய்த ஒருவனுக்கு நாம் நன்மை செய்ய வேண்டுமானால் நம்மை இன்றைய சமுதாயம் எள்ளி நகையாடும் அல்லவா ? இதனை அன்றே நினைத்துப் பார்த்த குறளாசிரியர்,

செய்தக்க அல்ல செயல் கெடும் (466)

நன்று ஆற்றலுள்ளும் தவறுண்டு (469)

எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும் (470)

என்று தொடங்கும் குறளை தெரிந்து செயல்வகை என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார்.

* * *

ஆள்வினை (மனித ஆற்றல்), ஆன்ற அறிவு ஆகிய இரண்டும் இணைந்து தொடர்ந்து ஒருவன் வாயிலாகச் செயல்பட்டால் தான் இன்று குடும்பத்தை மேம்படுத்த இயலும். மனித ஆற்றல், சிறந்த அறிவு ஆகிய இரண்டும் ஏதேனும் ஒன்று பின்வாங்கிவிட்டாலும் குடியின் வெற்றி பாதிக்கும். அவ்வாறு ஒருவன் தனது குடியை மேம்படுத்தும் செயல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும்போது அவனைத் துன்பம் ஆட்கொள்ளுவது இயல்பு.

மேற்கூறப்பட்ட கருத்துக்களை குறளாசிரியர், தமது குறளில் குடி செயல்வகை என்னும் தலைப்பில்,

ஆள்வினையும் ஆன்ற அறியும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி (1022)

இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு (1029)

என்னும் குறள்களின் மூலம் கூறியுள்ளார்

திருவள்ளுவரின் குடிசெயல்வகை அதிகாரத்திற்குச் சிலருடைய வாழ்க்கையில் எடுத்துக் காட்டுக் கூறுவது போல வேமனாவின் ஒரு பாடல் அமைந்துள்ளது

'ராமுடு ஒக்டு புட்டி ரவிகுலம் ஈடேர்ச்சே
குருபதி ஜனியிஞ்சி குலமு ஜநீபே'

இராமன் ஒருவன் பிறந்து தனது இரவி குலத்தை ஈடேற்றினான். குரு வம்சத்தில் துரியோதனன் பிறந்து குடியையே கெடுத்தான் என்பது இதன் பொருள்

ஆகவே ஒரு குடி உயர்வதும், தாழ்வதும் அதில் பிறக்கும் மனிதர்களைப் பொருத்தே அமையும். இதனை வேமனா,

குலமுலோன ஒகடு குணவந்துடு உண்டின
குலமு வெலயு வானி குணமுசேத
வெலய வனமுலோன மலயஜம் உன்னட்லு
விசுவதா பிராம வினர வேமா

என்று கூறுகிறார்.

நற்குண நலன்கள் உள்ள ஒருவன் குடும்பத்தில் இருப்பானாகில் அவனுடைய நற்குணத்தால் குலம் (குடி) சிறப்படையும். எவ்வாறு எனில் பெரிய தோப்பில் ஒரு சந்தன மரம் இருப்பின் அது தோப்பு முழுவதற்கும் மணத்தைப் பரப்பிச் சிறப்படையச் செய்யும் அல்லவா, அதுபோல,

ஆள்வினையும் அறிவும் குறைந்தவர்களுக்கு தோப்பின் இயல்பான மரங்களையும், ஆள்வினையும்

அறிவும் நிறைந்தவனக்குச் சந்தன மரத்தையும் வேமனா உவமையாகக் காட்டுகிறார்.

* * *

பெருந்தகைமை உள்ளவனுடைய செல்வம் மருந்து மரம் போன்றது (217) என்னும் திருவள்ளுவரின் கருத்தினையும் வெலய வனமு லோன மலயஜம் (தோப்பின் இடையே இருக்கும் ஒரு சந்தன மரம்) என்னும் வேமனாவின் கருத்தினையும் ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்க.

சமுதாயத்தில் (பொருளாதாரம், சாதி, இனம், குலம் முதலியவற்றில்) மேல்நிலையில் இருப்பவர்கள் சிறந்த பண்புகள் இல்லாது போனால் அவர்கள் மேல்நிலையில் உள்ளவர் அல்லர். அதேபோல் மேலே குறிப்பிட்டவற்றில் மேல் நிலையில் இல்லாதோர் சிறந்த பண்புகள் அமையப் பெற்றிருப்பின் கீழ் மக்கள் அல்லர். இக்கருத்தைக் குறளாசான் பெருமை என்னும் அதிகாரத்தில்,

மேலிருந்தும் மேல்அல்லார் மேல்அல்லவர் கீழ்இருந்தும்
கீழ்அல்லார் கீழ் அல்லவர் (குறள் 973)

என்று கூறியுள்ளார்.

ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்,

வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே

என்று பாடினான்.

எம்மொழிக் கவிஞராயினும், அவர்கள் எந்த நாட்டினர் ஆனாலும் பெரும்பாலும் இதே கருத்து தான் கொண்டிருப்பார்கள் போலும்.

வேமனாவின் பார்வை இத்துறையில் எவ்வாறு உள்ளது என்பதைப் பார்க்கலாம்.

சாதிகள் எண்ணற்றவையாக இருப்பினும் அவை அனைத்தையும் நான்கு பிரிவுகளில் அடக்குவர். அவர்கள் பிராம்மணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்பவர். தமிழில் இப்பிரிவுகளை அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்று குறிப்பிடுவர்.

ஒவ்வொருவனும் அவன் செய்யும் தொழிலை வைத்தே எப்பிரிவைச் சேர்ந்தவன் என்று தீர்மானிக்க வேண்டும். குலம் முக்கியமல்ல. இது கீதை கூறும் மொழி.

மச்சகந்தி என்னும் செம்படவப் (பரதவப்) பெண்ணுக்குப் பிறந்த மகன் வியாசர் என்னும் அந்தணன். சத்திரியர் குலத்தில் பிறந்த கௌசிகன் பிரம்மரிசி ஆனான். பிராம்மண குலத்தில் பிறந்த துரோணர் சத்திரியர் ஆனார். அவருடைய மகன் அசுவத்தாமனும் செய்யும் தொழிலாலேயே சிறப்புப் பெற்றான்.

அறியாமை ஒருவனிடம் இருக்கும் வரை மனிதன் மூடனாக இருக்கிறான். மூடனாய் இருக்கும் வரை ஒருவனை சூத்திரன் என்று அழைக்கலாம்.

'சூத்திரன்' என்னும் சொல்லுக்கும், 'வேளாளன்' என்னும் சொல்லுக்கும் நிறைய வேறுபாடு உண்டு. சூத்திரன் ஒருவன் பிரம்ம ஞானம் (அனைத்தும் சமம்

என்னும் அறிவு) அடைந்துவிட்டால் அவன் பிராம்மணன் ஆகி விடுகிறான். வேடர் குலத்தில் தோன்றிய வால்மீகி அறியாமை அகன்று ஞானம் பெற்ற காரணத்தால் அவரை 'பிரம்மரிசி' என்று அழைக்கின்றனர். இது வேமனாவின் பார்வை.

அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தில் அறம் எப்போது செய்ய வேண்டும் என்பது பற்றிக் குறளாசான் குறிப்பிடும் போது,

*அன்றுஅறிவாம் என்னாது அறம்செய்க மற்றுஅது*
*பொன்றுங்கால் போன்றாத் துணை (குறள் 36)*

என்று கூறுகிறார்.

அதாவது அறம் செய்வதற்கு இந்த இளமை ஏற்றதல்ல. முதுமை அடையும் போது செய்தால் போதும் என்று நினைக்காமல் இளமையில் இருந்தே செய்க. அந்த அறம்தான் ஒருவனுடைய உயிர் போகும் போது அவனுக்குத் துணையாக இருப்பது என்பது இதன் பொருள்.

அறம் செய்வோம் என்னும் எண்ணம் எழும்போது சூழ்நிலை அதற்கேற்றபடி அமையுமா ? செல்வ நிலை ஒருவரின் வாழ்வில் என்றும் ஒரே தன்மை உடையதா ? அன்றறிவாம் என்று நினைத்தால் முதுமையில் பொருளீட்ட இயலுமா ? அல்லது ஈட்டிய பொருள் அதுவரை நிலைத்திருக்குமா ? நிலைத்திருப்பினும் ஒருவனின் கையகப்பட்டிருக்குமா ?

ஆகவே தான் வேமனாவிற்கும் இதே எண்ணம் கருக் கொள்கிறது.

தான தர்மமுலனு தக ரேபு நேடனி
கால லயமு சேத கஷ்ட நருடு
தானு ஏமி அவ்னோ தனப்ரதுகு ஏமி அவ்னோ
மாய தெலிய லேரு மஹினி வேமா.

'தான தர்மங்கள் செய்வதற்குச் செல்வம் இருந்தும் அதைச் செய்யாமல் இன்று - நாளை என்று காலத்தைக் கடத்துவான் உலோபி. அவ்வாறு நாள்களைக் கடத்துபவன் - தான் என்ன ஆவான் என்பதையும், தனது வாழ்வு எப்படி ஆகும் என்னும் மாயையும் அறிய மாட்டான் கேளாய் வேமா' என்கிறார் வேமா.

இரு பெருங்கவிஞர்களும் பல இடங்களில் கருத்தளவில் ஒன்றுபடுவதையும், வேறுபடுவதையும் கண்டோம். இருவரின் காலங்கள் வெவ்வேறாக இருந்த போதிலும் சமுதாய நிலை ஏறக்குறைய ஒன்று போல்தான் உள்ளது. ஏன் ? அவர்களுக்குப் பிறகு பல சீர்திருத்தவாதிகள் நாட்டில் தோன்றி நல்லவற்றை எடுத்துக்கூறிய பிறகும் கூட மக்களின் வஞ்சகச் செயல்களும், கண்மூடித்தனங்களும், காட்டுமிராண்டித் தனங்களும் தலை விரித்தாடுவதைக் காண முடிகிறது.

படித்தவர்கள், தாம் கற்றவற்றைப் பாமரர்க்கு எடுத்துக் கூறுவதால் மட்டும் போதிய அளவு பலனை எதிர்பார்க்க இயலாது. நடைமுறைப் படுத்தினால் மட்டுமே நல்லவற்றை எதிர்பார்க்க இயலும். சமுதாய விரோதிகள் சட்டங்களின் துணை கொண்டு தப்பி விடாமல் பார்த்துக் கொள்ள சமூக நிலையங்களும் அரசும் கண் விழிப்போடு இருப்பின் இருபெரும் கவிஞர்கள் காண விழைந்த சமுதாயத்தை உண்மையாக்க முடியும்.

❀ ❀ ❀

# பார்வைக்கு உரியவை

1. சேலம் தலைமையாசிரியர் அமரர் எம்.வி. தேவராசன் குடும்பத்தார் உதவிய நாள் குறிப்பு - 1947.

2. வேமன பத்தியம் (தமிழ் எழுத்துகளில் அமைந்த தெலுங்குப் பாடல்கள்). ஜே. ராவுஜி தொகுப்பு - ரத்னா பதிப்பகம், சூளை, சென்னை 7, 1976.

3. திருவள்ளுவரும் வேமனாவும் - பா. அன்பரசு தொடர் கட்டுரை, குறள்மணம் திங்களிதழ் (1987 - 88), 81, காந்தி சாலை, கள்ளக்குறிச்சி - 606 202.

4. வேமனா காட்டும் வாழ்க்கை நெறி - பா. அன்பரசு கட்டுரை, சப்தகிரி 1996, பிப்ரவரி இதழ், திருப்பதி - 517 501.

5. யோகி வேமனா பத்ய ரத்னமுலு (தெலுங்கு சி.வி. கிருஷ்ணா புக் டிப்போ, 1999, ஆர்காடு சாலை, கோவில் சந்து, மதராஸ் - 1 (1907).

6. Great Poets of the People (Vemana) - Dr. G. Appa Roo, M.A., Ph.D., Department of Telugu, University of Madras, Madras - 5 (1974) ஆங்கிலம்.

* * *